# பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | சிறப்புத் தீர்மானம் 1 – அம்மா பிறந்த நாள் வாழ்த்து | 1 |
| 2 | சிறப்புத் தீர்மானம் 2– அம்மாக் குடிநீர் திட்டம் | 5 |
| 3 | சிறப்புத் தீர்மானம் 3 – 50 சதவீதம் மகளிர் இட ஒதுக்கீடு | 9 |
| 4 | சிறப்புத் தீர்மானம் 4– மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லா பேருந்து சேவை | 13 |
| 5 | சிறப்புத் தீர்மானம் 5– கலைவாணர் அரங்கம் திறப்பு | 19 |
| 6 | துறை வாரியாக சாதனை | |
| | கல்வித் துறை | 24 |
| | பொது சுகாதாரத் துறை | 41 |
| | மாவட்ட குடும்ப நலத்துறை | 53 |
| | மின்துறை | 54 |
| | கணிப்பொறி மையம் | 58 |
| | இயந்திர பொறியியல் துறை | 59 |
| | திடக்கழிவு மேலாண்மைத் துறை | 62 |
| | பேருந்து சாலைகள்துறை | 69 |
| | பாலங்கள்துறை | 78 |
| | மழைநீர் வடிகால்வாய் துறை | 83 |
| | பணித்துறை | 87 |
| | பூங்காத்துறை | 89 |
| | நிதி மேலாண்மை குழுமம் | 90 |
| | வருவாய் துறை | 91 |
| | சிறப்பு திட்டங்கள் துறை | 97 |
| | கட்டடத்துறை | 106 |
| 7 | மன்றக் கூட்ட விவரம் | 108 |
| 8 | ஒப்பீடு | 110 |
| 9 | நிறைவுரை | 113 |

சிறப்பு தீர்மானம்–1

## மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து!

வான் மழை போல்
வைகறை விடியல் போல்,
தேனினும் இனிய
தெள்ளு தமிழ் போல்,

வாடா மலரைப் போல்
வடிவுடை அம்மன் போல
வையகம் தழைத்திடும்
வளர் பிறைச் சந்திரன் போல்,

பசியில் உணவு போல்
பாசத்தின் உணர்வு போல்,
பரிதவிக்கும் ஏழையரை
அரவணைக்கும் அன்னை போல,

காலம் தந்த கொடைபோல்,
ஞாலம் காக்கும் படை போல்

ஏங்கி நிற்கும் ஏழையரைத்
தாங்கி நிற்கும் வரம் போல்,
தமிழகம் செழிக்கவே
வந்துதித்த மாமணி….!
எங்கள் அம்மா!

தமிழரின் நிலை உயர்த்த
அவதரித்த கோ மணி….!
எங்கள் அம்மா!

அகவை ‘68’ ல்
எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில்,
234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று
சரித்திரம் படைத்து சாதனை நிகழ்த்தி
மீண்டும் அரியணை ஏறப்போகும்,

எனது கடவுள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
இதயதெய்வம் புரட்சித்தலைவி
அம்மா அவர்கள்,

பல்லாண்டு பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறாண்டு
பார் போற்ற வாழ்க! வாழ்க!

வில்லாதி வில்லர்களும்
சொல்லாதி சொல்லர்களும்
சூழ நின்று தொழுதிடவே
சுடர் மணி போல் வாழ்க! வாழ்க!

தமிழர்தம் இதயங்களில்
குடியிருந்து கோலோச்சி
தமிழினம் தழைத்திடவே
தவமாக வாழ்க! வாழ்க!

என்றே பணிந்து,

என்சார்பிலும்,
துணைமேயர் சார்பிலும்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் சார்பிலும்,
பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும்
23,474 அலுவலர் மற்றும் ஊழியர் சார்பிலும்,
பெருநகர சென்னை மாநகராட்சி வாழ்
1 கோடி மக்கள் சார்பிலும்,

இனிய பிறந்தநாள் வணக்க மலர்களை

மாண்புமிகு அம்மா அவர்களின்

பொற்பாதங்களில் சமர்ப்பித்து

தாள் பணிந்து வணங்கி மகிழ்கிறேன்.

------

சிறப்பு தீர்மனம் – 2

## அம்மா குடிநீர் திட்டம் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பாராட்டு

‘நீரின்றி அமையாது உலகு’ என்பது வள்ளுவர் வாக்கின் மாட்சி! ‘குடிநீரின்றி அமையாது மானுட வாழ்க்கை’ என்பது கண்கூடாக உலகில் நாம் காணும் காட்சி!

தமிழகத்தில் வாழும் மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கிட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இலட்சியம் ஆகும். இந்த இலட்சியத்தை நிறைவேற்ற கூட்டுக்குடிநீர் திட்டங்கள், ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்ட குடிநீர் வழங்கு திட்டங்கள், தனி மின் விசைத் திட்டங்கள் என எண்ணற்ற குடிநீர்த்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்று, இதுவரை கடந்த 56 மாதங்களில், ரூபாய் 7 ஆயிரத்து 324 கோடியே 34 லட்சம் செலவில், 41 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் இதர குடிநீர்த் திட்டங்கள்செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ரூபாய் 6 ஆயிரத்து 602 கோடியே 78 லட்சம் மதிப்பிலான 69 திட்டப்பணிகள் மிக விரைந்து செயலாக்கம் பெற்று வருகின்றன. இப்படி பெருமளவிலான குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் அனைத்து குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உறுதி செய்திருக்கிறார்கள்.

சென்னை மாநகரில் வசதி படைத்தவர்கள் மினரல் வாட்டர் என்று சொல்லப்படுகின்ற பாட்டில்களில் அடைக்கப்பட்ட குடிநீரை வாங்கிப் பயன்படுத்துக்கின்றனர். இந்தக் குடிநீர், Reverse Osmosis எனப்படும் எதிர்மறைச் சவ்வூடு பரவுதல் என்றும் தொழில் நுட்பத்தின் மூலமாக சுத்திகரிக்கப்படும் தண்ணீர் ஆகும்.

பணம் படைத்தவர்களும் வசதி படைத்தவர்களும் மட்டுமே வாங்கிப் பயனடையும் இக்குடிநீரை ஏழை எளிய மக்களுக்கும் வழங்கிட வேண்டும், அவர்களும் 'மினரல் வாட்டர்' பெற்று மனம் மகிழ்ந்து பயன் பெற்றிட வேண்டும் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற உன்னத நோக்குடன் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், "அம்மா குடிநீர் திட்டம்" என்னும் புதிய திட்டத்தை செயல்படுத்தி ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி, முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 100 தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில், எதிர்மறை சவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் அமைத்திட இந்த குடிநீர் நிலையங்கள் மூலம் சுத்திகரிக்கப்படும் குடிநீரை, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளர்கள்.

ஆய்வகங்கள் மூலம் பரிசோதனை செய்து, தரத்தை உறுதி செய்து வழங்கப்படும். இந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், குடும்பம் ஒன்றுக்கு, நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் என்ற அளவில் பொதுமக்களுக்கு விலையின்றி

வழங்கிட கருணைத் தாயாம் முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதற்கென, ஏழை எளிய மக்களுக்கு Smart Card வழங்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த Smart Card ஐ பயன்படுத்தி, தங்களுக்கான மினரல் வாட்டரை, குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து ஏழை எளிய மக்கள் நாள் தோறும் எளிதில் பெற்று பயன் அடைந்திடலாம்.

வசதி படைத்தவர்கள் மட்டுமே வாங்கிப் பயனடைந்திடும் மினரல் வாட்டரை, ஏழைய எளிய மக்களும் பெற்று பயன் பெற வேண்டும் என்று கருணை உள்ளத்துடன் விலையின்றி அதனை வழங்கிட ஆணையிட்டு, அம்மா குடிநீர் திட்டத்தை செயல்படுத்தும்,

மனித நேயச் செம்மல்

மனிதாபிமானத் தங்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சி தனது சிரம் தாழ்த்தி வணங்கிப் பாராட்டுகிறது.

சிறப்பு தீர்மானம் – 3

## உள்ளாட்சிப் பதவிகளில் மகளிருக்கு 50% ஒதுக்கீடு தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பாராட்டு

பெண்ணினத்தின் காவலராகவும், பெண்ணுரிமை பேணுகின்ற சமுதாய சிற்பியாகவும், வகை வகையாய் திட்டங்கள் தந்து பெண்ணினத்தை முன்னேற்றும் பெருமை மிக்க தலைவராகவும் திகழுகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் மேலும் ஒரு படி முன்னே சென்று, நாட்டை முன்னேற்றப் பாதையில் வழி நடத்திச் செல்வதில் பெண்களின் அறிவையும் திறமையையும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், மகத்தான உத்தரவு ஒன்றை பிறப்பித்திருக்கிறார்கள்.

உள்ளாட்சி அமைப்புகளில் அதிக அளவில் பெண்கள் பங்கு பெறுவதை உறுதி செய்யும் வகையில் உள்ளாட்சிப் பதவிகளில் பெண்களுக்கு 50 சதவீதம் வழங்கிட வேண்டும் என்பதே அந்த ஆணை ஆகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இந்த ஆணைப்படி, இதற்கான சட்டத் திருத்த சட்ட முன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் 20.02.2016 அன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன் வைத்து ஆய்வு செய்யப்பட்டு, ஏகமனதாக நிறை வேற்றப்பட்டுள்ளது.

நாட்டை வழி நடத்துவதில் பெண்களுக்கு உரிய பங்கை வழங்குவதில் நாட்டிலேயே முன்னோடித் தலைவராகத் திகழ்பவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகளில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் சட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் தான் முதன் முதலாக நிறைவேற்றினார்கள். இச்சட்டம், மாண்புமிகு அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில் 1994 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதன்படி மாநகராட்சிகள், நகராட்சிகள் பேரூராட்சிகள், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றில் உள்ள பதவிகளின் மொத்த

எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடு மேலும் உயர்த்தப்பட்டால், பெண்களை உள்ளாட்சி அமைப்புகளில் இன்னும் அதிக அளவில் பங்கேற்கச் செய்ய இயல்வதுடன் அதன் மூலம் நகரம் மற்றும் கிராம புறங்களை விரைந்து வளர்ச்சி அடைந்திடச் செய்திட இயலும் என்றும் உன்னத நோக்கத்துடன், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு என ஒதுக்கப்பட்டுள்ள பதவிகளின் அளவை, தற்போது 50 சதவீதம் ஆக உயர்த்திட வேண்டும் என உத்தரவிட்டார்கள்.

இதன் அடிப்படையில் தான் இதற்கான சட்டத் திருத்த சட்டமுன்வடிவு, தமிழக சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமுன்வடிவை, மிக விரைவில் சட்டமாக்கி, 2016 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வரவிருக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் நடைமுறைப்படுத்தி, அனைத்து

உள்ளாட்சி அமைப்புகளிலும் 50 சதவீதம் பதவிகளில் பெண்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அமர வைப்பார்கள், இது உறுதி.

தான் செய்த சாதனையை தானே முறியடித்தார் என்று திறமை மிக்க விளையாட்டு வீரர்களின் வரலாற்றில் படித்திருக்கிறோம். ஆனால் அத்தகைய திறமை மிக்க விளையாட்டு வீரர்களையும் மிஞ்சி, பெண்களுக்கு உள்ளாட்சி பதவிகளில் மூன்றில் ஒரு பங்கு வழங்கப்பட முன்னர் தான் செய்த சாதனையை தற்போது, 50 சதவிதம் என உயர்த்தி, தனது முந்தைய சாதனையை தானே முடிறியடித்து அதற்கும் உயர் அளவான சாதனை படைத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி தனது உளமார்ந்த பாராட்டுகளை தலைவணங்கித் தெரிவித்துக் கொள்கிறது.

சிறப்பு தீர்மானம் – 4

## மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லா பேருந்து சேவை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பாராட்டு

மதிப்புக்குரிய மாமன்ற உறுப்பினர்களே,

கடந்த 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது தமிழ்நாட்டுக்கு கேடு இழைத்த திமுக ஆட்சியை அகற்றி விட்டு, நாட்டு மக்களுக்கு நலம் சூழ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று என்னென்ன செய்ய இருக்கிறது என்று, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தனது சிந்தனைத் தேரைச் செலுத்தி, ஒவ்வொரு துறையாக, ஒவ்வொரு பிரிவாக ஆய்வு செய்து அதனை தேர்தல் வாக்குறுதிகளாக தமிழக மக்களுக்கு அளித்தார்கள்.

மக்களுக்குத் தந்த தேர்தல் வாக்குறுதிகள் என்பது புனிதமானவை. அவற்றை நிறைவேற்றுவதே முதற் கடமை என்ற இலட்சியம் கொண்டவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மாஅவர்கள் அதனால் தான், ஆட்சிப்

பொறுப்பேற்ற நாள் முதலாக மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதிகளை, ஒவ்வொன்றாக நிறை வேற்றி வந்தார்கள்.

தமிழகத்தில் உள்ள மூத்த குடிமக்கள் மீது பரிவும் பாசமும் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் அவர்களது நலம் பேண அப்படி அளித்த வாக்குறுதிதான், ‘‘மூத்த குடிமக்கள் அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்ய பஸ் பாஸ் வழங்கப்படும்’’ என்பது ஆகும்.

இந்த வாக்குறுதியை நிறைவேற்றிடும் வகையில், மூத்த குடிமக்கள் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்திட, ‘‘மூத்த குடிமக்களுக்கு கட்டணமில்லா பேருந்துச் சேவை’’ திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, இத்திட்டம் முதற்கட்டமாக, சென்னை மாநகரப் பேருந்துகளில் செயல்படுத்தப்படுகிறது. என்பதை இம்மான்றத்திற்குத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்திட்டத்தின்படி, 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த, இரவுப்

பேருந்துகள் உள்ளிட்ட, குளிர்சாதன வசதியற்ற அனைத்து பேருந்துகளிலும் கட்டணமின்றி பயணம் செய்யலாம்.

இதற்கென 10 டோக்கன்கள் வழங்கப்படும். இந்த டோக்கன்களை தாங்கள் பயணம் செய்ய விரும்பும் பேருந்தின் நடத்துனரிடம் கொடுத்து கட்டணம் ஏதுமின்றி மூத்த குடிமக்கள் பயணம் செய்யலாம்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் சென்னை மாநகர போக்குவரத்துக் கழக பஸ் டெப்போக்களில் வழங்கப்படுகின்றன. எந்தெந்த டெப்போக்களில் இந்த விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் என்ற விவரத்தை சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக இணைய தளமான www.mtcbus.org மூலம் தெரிந்து கொள்ளலாம். அன்றியும், விண்ணப்பப் படிவங்களை அதே இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பாசத்தின் வடிவமாய், பரிவின் உருவமாய்த் திகழும் மாண்புமிகு அம்மா அவர்கள், இதற்கான விண்ணப்பத்தை கொடுப்பதற்கென கடைசி தேதி என்று எதுவும் நிர்ணயிக்க வேண்டியதில்லை என்றும் மூத்த

குடிமக்கள் விண்ணப்பத்தை எப்போது வேண்டுமானாலும் அளிக்கலாம் என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, மூத்த குடிமக்கள் எந்த வித அரிபரியும் இன்றித் தங்களுக்கு உகந்த வசதியான நாளில் சென்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட பஸ் டெப்போக்களில் கொடுத்து அடையாள அட்டை மற்றும் டோக்கன்களைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த வசதி எந்தெந்த பஸ் டெப்போக்களில் செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும் சென்னை மாநகர போக்குவரத்துக் கழக இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்யும் மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த கருணைத் திட்டம், அம்மா அவர்களது பிறந்த நாளான **24.02.2016** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

இத்திட்டத்திற்கு பொதுமக்களிடையே உள்ள வரவேற்பைக் கண்டறிந்து மற்ற இடங்களுக்கும் இது விரிவு படுத்தப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இந்த அறிவிப்பின் மூலம் 2011 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட அத்தனை வாக்குறுதிகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிக் காட்டியுள்ளார்கள். இது, எந்த அரசியல் கட்சியும் இதுவரை செய்திடாத மாபெரும் சாதனை ஆகும்.

கொடுத்த வாக்குறுதிகளை உயிரெனக் கருதி அவற்றை நிறைவேற்றுகின்ற அற்புதத் தலைவர், எங்கள் தலைவர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! என்னும் பெருமையுடன் அனைத்திந்திய அண்ணா திமுக தொண்டர்கள் ஒவ்வொருவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் கீழே பணியாற்றுவதில் தனிப் பெருமிதமும் கொண்டு தலை நிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பெருமை பொங்கத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூத்த குடிமக்களின் மீது தனிப்பரிவும் பாசமும் கொண்டு, அவர்கள் மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்யும் கருணைத் திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பெருநகர சென்னை

மாநகராட்சி தனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்களை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறது.

சிறப்பு தீர்மானம் – 5

## கலைவாணர் அரங்கம் திறப்பு

## மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி!

திராவிட இயக்கத்தின் கொள்கைகளை திரைப்படங்கள் வாயிலாக மக்களிடம் எடுத்துச் சென்று, நகைச் சுவையுடன் அதனை பரிமாறி மக்கள் மனதில் பதியச் செய்த முன்னோடிகளில் ஒருவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள். தான் உழைத்துச் சம்பாதித்த பணத்தையெல்லாம் இல்லை என்று சொல்லாமல் ஏழை மக்களுக்கு வாரி தந்த கலைவாணரின் நினைவாக சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இருந்த கலையரங்கம் தான் கலைவாணர் அரங்கம்!

சென்னையின் சீர்மிகு அடையாளமாக விளங்கி வந்த கலைவாணர் அரங்கத்தை, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்காக இடித்துத் தரை மட்டம் ஆக்கியது.

எந்த இயக்கத்தை சார்ந்திருந்ததால் இவ்வளவு பெரிய பதவிகளும் படாடோபங்களும் பெற முடிந்ததோ அந்த இயக்கத்தின் முன்னோடியாய்

பட்டி தொட்டி எங்கும் பரப்பிய கலைவாணர் அவர்களின் பெயரால் அமைந்திருந்த கலையரங்கத்தை இடித்துத் தள்ளிய கருணாநிதி, அதனை மீண்டும் கட்டுவதற்கு எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை எந்த ஒரு அறிவிப்பும் வெளியிடவில்லை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால், திராவிட இயக்கத்தின் வழித் தோன்றலாகவும், சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளியாகவும் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கலைவாணர் அரங்கம் கருணாநிதியால் இடிக்கப்படுவதற்கு முன் எந்த இடத்தில் இருந்ததோ அந்த இடத்திலேயே புதுப் பொலிவுடன் பிரம்மாண்ட முறையில் கலைவாணர் அரங்கம் கட்டப்படும் என்று 25.04.2012 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, 62 கோடியே 73 லட்சம் செலவில், 1 லட்சத்து 94 ஆயிரத்து 452 சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் முழுவதும் குளிர் சாதன வதியுடன் மிகப் பிரம்மாண்டமான முறையில் கட்டப்பட்டுள்ள கலைவாணர் அரங்கத்தை

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த 13.02.2016 அன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைவாணர் அரங்கமானது, மூன்று தளங்களுடன் முழுவதும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் கட்டப்பட்டுள்ளது. இந்த அரங்கு, கலையரங்கமாகவும், நவீன திரையரங்கமாகவும் பயன்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த கலைவாணர் அரங்கத்தின் முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் 1100 பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காணும் வசதியும், மூன்றாவது தளத்தில் நவீன வசதிகளுடன் சுமார் 1300 பேர் அமரக்கூடிய அளவில் பல்நோக்கு அரங்கமும் கட்டப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வசதிக்காக மூன்று தளங்களுக்கும் சென்று வர நகரும் படிக்கட்டு வசதியும், மின்தூக்கி வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த அரங்கிற்குத் தங்கு தடையின்றி மின்சாரம் வழங்கும் வகையில் உயர்சக்தியுள்ள மின்னாக்கி வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்தப் புதிய கலைவாணர் அரங்கத்தின் தரைத் தளத்தில் அலுவலர்களுக்கான அறைகளும், முதல் தளத்தில் உணவு மையங்களும்,

இரண்டாம் தளத்தில் விருந்தினர்கள் தங்குவதற்கான அறைகளும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்களில் கூட்டரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. கலைவாணர் அரங்கத்தின் முன்பாகத் தரைத் தளத்தில் சுமார் 200 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 500 இருசக்கர வாகனங்கள் நிறுத்திடவும், கட்டடத்தின் அடிதளத்தில் சுமார் 50 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 100 இருசக்கர வாகனங்கள் நிறுத்திடவும் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய கலைவாணர் அரங்கத்தில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதால் இங்கு வருகை புரியும் பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள்

எங்கே கலைவாணர் அரங்கம் காணாமல் போய் விடுமோ என்ற திராவிட இயக்கப் பற்றாளர்களின் அச்சத்தை நீக்கி, பெருநகர சென்னை மாநகரின் சீர்மிகுந்த அடையாளத்தை மீட்டெடுத்த அதிநவீன வசதிகளுடன் மிக பிரம்மாண்டமான முறையில் கலைவாணர் அரங்கத்தை மீண்டும் புதிதாகக் கட்டி திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு

பெருநகர சென்னை மாநகராட்சி தனது உளமார்ந்த பாராட்டுதல்களையும், பணிவான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**<u>துறைவாரியாக சாதனை</u>**

**<u>மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 2011 முதல் 2016 வரை செய்து முடிக்கப்பட்ட மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள முக்கிய பணிகளின் விவரங்கள்</u>**

❖ கடந்த **4** ஆண்டுகளில் **419** திட்டப்பணிகளுக்கான அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டு, **271** பணிகள் முடிவுற்றும், **130** பணிகள் நடைபெற்று **93.6** சதவீதம் அளவிற்கு **52** மாதங்களில் நடைபெற்றுள்ளது. பல்வேறு நிர்வாக காரணங்களால் **27** பணிகள் அதாவது **6.44** சதவீதப் பணிகள் மட்டுமே கைவிடப்பட்டுள்ளன என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாநகராட்சி வரலாற்றில் இது ஒரு புதிய சரித்திரம். இந்த சரித்திரத்தை படைக்க காரணமான மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி துறை வாரியாக முக்கிய சிறப்பு திட்டங்களை அவையில் பதிவு செய்கிறேன்.

**<u>கல்வித்துறை</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதல் மற்றும் ஆணையின்படி முழுமையான மற்றும் தரமான கல்வி ஒவ்வொரு குழந்தையையும் சென்று அடைய வேண்டும் என்ற உயரிய கொள்கையோடு செயல்பட்டு வரும் சென்னைப் பள்ளிகள், உலகத்தரத்திற்கு இணையாகப் போட்டிப்போடும் அளவிற்கு தற்போது உயர்ந்துள்ளன. இதற்கான கல்வியை அளிப்பதோடு இணைக்கல்வி செயல்பாடுகளான கணினி அறிவியல், வாழ்க்கைத்திறன் வளர்க்கும் கல்வி, உடலும் உள்ளமும் ஆளுமை

வளர்ச்சியடைய பல்வேறு திட்டங்கள் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் ஏழைகள். பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களின் வசிப்பிடம் படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால் நல்ல திறமையுள்ள மாணவர்களாக உருவாக்க மாணவர்கள் தங்கி படிக்கும் விடுதிகள் எல்லா வசதிகளையும் **(படுக்கும் அறை, உணவு அறை, படிக்கும் அறை, செய்தித்தாள்கள், நூல்கள், விளையாடுவதற்கேற்ற சூழ்நிலை மற்றும் அனைத்து வசதிகளும்)** உள்ளடக்கிய வகையில் எந்த மாநகராட்சியிலும் இதுவரை இல்லாத தரத்தில் தனியார் பள்ளிகளை விஞ்சும் அளவிற்கு **அம்மா உண்டு உறைவிடப் பள்ளிகள் (Residential School)** மாணவர்களுக்கென்று சுப்பராயன் தெரு, சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், மாணவிகளுக்கு சைதாப்பேட்டை, சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.09.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் எல்லா பள்ளிகளிலும் இந்த வசதிகள் அமைக்கப்படும்.
2. 3 முதல் 5 வயதிற்குள் இருக்கும் மழலையர்களுக்கு **மாண்டிசோரி வழிக் கல்வி** செயல்படுத்தப்படுவதால் சமுதாயத்தில் இதற்கு உற்சாக வரவேற்பு உள்ளது. அதன் விளைவாக 30 பள்ளிகளில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் 2011–ற்கு பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மேயர் அவர்கள் நடவடிக்கை எடுத்து **கடந்த நான்கரை ஆண்டுகளில் ஆண்டுகளில் 135 பள்ளிகளில்**

**தொடங்கப்பட்டுள்ளது.** இந்த ஆண்டில் மட்டும் 100 பள்ளிகளில் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் 165 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இதனால் சென்னை பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

3. மாணவர்கள் பாடங்களைக் கேட்பதை விட கண்ணால் காணும் போது கருத்து மனதில் நீடித்து நிலைக்கும். அனைத்து பாடங்களையும் டிஜிட்டல் முறையில் நவீனப்படுத்தி எத்தனை முறை வேண்டுமானாலும் அவற்றைத் திரும்ப, திரும்ப பார்த்து எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள வகுப்பறையே **வளவகுப்பறை (Smart Class)** ஆகும். இவ்வகுப்பறைகள் தனியார் பள்ளிகளிலேயே சில பள்ளிகளில்தான் உள்ளன. சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களும் இத்தகைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இத்தகைய வள வகுப்பறைகள் **புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டு**, மாணாக்கர்களின் கற்றல் திறன் அதிகரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

4. முதன் முறையாக சென்னை மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் அன்றாட நிகழ்வுகளை அறியும் வகையில் **செய்தித் தாள்கள் படிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.** மேலும் மாணவர்களின் வகுப்பறைக்கு விலையில்லா செய்தித் தாள்கள் வழங்கப்படுகின்றன. தமிழ் செய்தித்தாள்கள் மட்டுமல்லாது ஆங்கிலச் செய்தித்தாள்களும் வழங்கப்படுவது மாணவர்களின் ஆங்கிலப் புலமையை வளர்க்கும். மாணவர்களுக்குச் செய்தித்தாள்களில் இடம் பெறும் கருத்துகள்,

கட்டுரைகள், செய்திகளிலிருந்து **வினாடி வினா** நடத்தி வெற்றி பெறும் மாணாக்கர்களுக்குப் பரிசுகள் வழங்கி, கற்கும் ஆற்றலையும், பொது அறிவையும் அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

5. பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையில் குழந்தைகள் விளையாடி மகிழ 30 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தனியார் பள்ளிகளை மிஞ்சும் வகையில் இயற்கையோடு இணைந்து கற்கும் வகையில் உடல் மற்றும் மன உறுதியை உண்டாக்குவதற்காக இயற்கை சூழலுடன் கூடிய விளையாட்டு உபகரணங்கள் நிறைந்த கண்கவர் **விளையாட்டுப் பூங்காக்கள்** (Play Park) அமைக்கப்பட்டுள்ளன.

6. சென்னை மேல்நிலைப்பள்ளி, திருவான்மியூர் பள்ளியைச் சார்ந்த மாணவி. **செல்வஜோதி** புவியியல் பாடத்தில் 2013–2014ஆம் கல்வியாண்டில் **200–க்கு 198 மதிப்பெண்கள்** பெற்று **மாநில அளவில் முதல் இடம்** பெற்று சென்னை மாநகராட்சிக்குப் பெருமையைச் சேர்த்தார். இதுவரையில் எவரும் இச்சாதனையைப் பெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

7. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பட்டம் பெற்ற இளைஞர்கள் தகுதி வாய்ந்த வேலைக்கு செல்ல வேண்டும் என்ற அரிய நோக்கில் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் இரண்டு இடங்களில் **போட்டித் தேர்வுக்கான வகுப்புகள்** தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்தத் ஆண்டில் மட்டும் இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி **11 பேர் UPSC (IAS/IPS)**

**முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.** இந்த திட்டம் மேலும் 10 பள்ளிகளில் நிறுவப்பட உள்ளன.

8. 2013–2014ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி விகிதம் அதிகபட்சமாக 88.98 சதவிகிதம் ஆக அதிகரித்தது. 2014–2015 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற அரசு 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 7860 மாணவ/மாணவியர்கள் தேர்வு எழுதி 7243 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி சதவிகிதம் 92.15 ஆகும். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 1.4 சதவீதம் கூடுதலாகும். 70 சென்னைப் பள்ளிகளில் 22 பள்ளிகள் 100 சதவிகிதம் தேர்ச்சி விழுக்காட்டைப் பெற்றுள்ளன. மேலும் 8 பள்ளிகளில் தலா 1 மாணவரைத் தவிர தேர்வு எழுதிய மற்ற அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளமை சிறப்புக்குரியதாகும். ஆக மொத்தம் 70 சென்னைப் பள்ளிகளில், 65 பள்ளிகள் 80 சதவிகிதத்திற்கு மேல் தேர்ச்சியையும், 5 பள்ளிகள் 79.1, 77.8, 67.5, 64.1, 59.2 சதவீத தேர்ச்சிகளை பெற்றுள்ளன. 1780 மாணவ/மாணவியர்கள் 400க்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்று சென்னை மாநகராட்சிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

9. சென்னையில் ஆதிதிராவிடப்பள்ளி 2, ஆங்கிலோ இந்தியன் பள்ளி 17, இராணுவப்பள்ளி 1, அரசு உதவி பெறும் பள்ளிகள் 90, அரசு பள்ளிகள் 21, அரசு பகுதி உதவி பெறும் பள்ளிகள் 26, சிறப்புப் பள்ளிகள் 4, தனியார் பள்ளிகள் 219 மற்றும் சென்னைப் பள்ளிகள் 32 ஆக மொத்தம் 412 மேல்நிலைப்பள்ளிகளில் நம் மாணாக்கர்கள் தனியார் பள்ளிகளைக்

காட்டிலும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் அதிகமான மதிப்பெண்களை பெற்று **78வது இடத்தை** நமது சென்னைப் பள்ளி பெற்று கல்வி தரத்தில் சென்னை மாநகராட்சி பள்ளிகள் மிக பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளன.

10. கடந்த காலங்களில் குறைந்த எண்ணிக்கையிலான சென்னை மாநகராட்சி பள்ளி மாணவர்களே பொறியியல் கல்லூரியில் பயின்றனர். 2013–2014ஆம் கல்வியாண்டில் தரவரிசை பட்டியலில் முதல் 100 இடங்களை வகிக்கும் பொறியியல் கல்லூரிகளில் சென்னை பள்ளிகளில் பயின்ற 744 மாணவ/மாணவியர்கள் பொறியியல் படிப்பைப் படிக்க தகுதி பெற்றிருந்தனர். 2014–2015ஆம் கல்வியாண்டில் இந்த எண்ணிக்கை 106 மேலும் அதிகரித்து, **850 மாணவர்கள்** இத்தகைய தரம் வாய்ந்த பொறியியல் கல்லூரியில் படிக்க தகுதி பெற்றனர் என்பது போற்றத் தக்க சாதனை ஆகும்.

11. சென்னை வாழ் மக்களின் நலன் கருதி மாணவர்கள் சேர்க்கைக்கு எந்த தகுதி நிபந்தனை இல்லாமல் சென்னையில் உள்ள எந்தப் பள்ளிகளிலும் சேர்க்கப்படாத மாணவர்களைக் கூட நம் சென்னை பள்ளிகளில் 12ஆம் வகுப்பில் சேர்த்து +2 பொதுத் தேர்வில் 85 சதவிகித தேர்ச்சி விழுக்காடு எட்டப்பட்டுள்ளது.

12. **e-Book learning** என்பது இணைய தளத்தினைப் (Internet) பயன்படுத்தி குறிப்பிட்ட வலைதளத்திற்கு சென்று அதில் உள்ள தேவையான புத்தகத்தினைப் பதிவிறக்கம் (Download) செய்து

அதனை, கணினியில் சேமித்து வைத்து நமக்குத் தேவைப்படும் போது அப்புத்தகத்தினைப் படித்தலே e-Book learning எனப்படும். **இப்புதிய நடைமுறை** திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் தொடங்கப்பட்டு மாணவர்கள் பயன்பெறும் வகையில் செவ்வனே நடைபெற்று வருகின்றது. இந்நடைமுறை மேலும், அனைத்து பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

13. மாணவர்கள் +2 முடித்துவிட்டு மேற்படிப்பினை அவர்களுக்கு பிடித்த வகையில் எளிதாக தேர்வு செய்ய ஏதுவாக **"என்ன படிக்கலாம் ? எங்கு படிக்கலாம் ?"** என்ற சிறப்பு கையேடு அனைத்து மாணக்கர்களுக்கும் வழங்கப்பட்டன. இப்புத்தகத்தின் மூலம் என்ன படிக்கலாம் ? அதனை எங்கு படிக்கலாம் ? என்னென்ன சலுகைகள் கிடைக்கும் ? என்பதை சரியாக அறிந்திடாத மாணவர்களும் அவன் படிக்கும் படிப்பினை எங்கு படிக்கலாம் என திறம்பட தெரிவு செய்துள்ளனர். மேலும் படிப்புக்காலத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் பற்றி தெள்ளத் தெளிவாக இப்புத்தகத்தின் வாயிலாக அறிந்துள்ளனர்.

14. 12—ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் வெற்றி பெற்று B.E., M.B.B.S., படிப்பில் சேர்ந்த மாணவ/மாணவிகளுக்கு கலந்தாய்வின் போது ரூ.5,000/—மும், கல்லூரியில் சேரும் பொழுது ரூ.40,000/—மும், கல்வியாண்டு தொடக்கத்திலேயே **மேற்படிப்பு ஊக்கத்தொகையும்** வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கல்வியாண்டில் பொறியியல் மருத்துவக் கல்லூரிகளில் சேரும் அனைத்து மாணவர்களுக்கும் இச்சலுகை

வழங்கப்பட்டுள்ளது. மற்ற 3 ஆண்டுகளுக்கும் ஆண்டுதோறும் ரூ.45,000/– வழங்கப்படுகிறது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேரும் 100 மாணவ/மாணவிகளுக்கு ரூ.7,000/–மும், ஆசிரியர் பயிற்சி, நர்ஸிங் பயிலும் 50 மாணவ/மாணவிகளுக்கு ரூ.10,000/–மும், சட்டம் பயிலும் 15 மாணவ/மாணவிகளுக்கு ரூ.10,000/–மும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன.

15. சென்னைப் பள்ளி மாணவி செல்வி. B.K.அமலா "**கிக் பாக்ஸிங்**" என்ற விளையாட்டுப் போட்டியில் மாநில அளவில் முதல் இடத்தை பெற்று தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

16. சென்னை மாநகராட்சி வரலாற்றில் முதன் முறையாக **உலகத் தரம் வாய்ந்த கால்பந்து மைதானம்** சென்னை மேல்நிலைப் பள்ளி எம்.ஜி.ஆர் நகரில் நிறுவப்பட்டு, அதனை மாணவர்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

17. சென்னை மாநகராட்சி பள்ளி **மாணாக்கர்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் வகையில்** கல்வித்துறையின் வழிகாட்டுதலோடு 2015–2016ஆம் கல்வி ஆண்டில் டீச்ஃபார் இந்தியா (Teach for India) நிறுவனம் மூலம் இதுவரை 101 இணை வழிகாட்டு ஆசிரியர்கள் (Fellows) பயிற்சி பெற்றுள்ளனர். அவர்கள் மூலம் 32 சென்னைப் பள்ளிகளில் மாணவ/மாணவியர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணாக்கர்களின் ஆங்கிலம் பேசும் திறன் சிறந்து விளங்குகிறது.

18. அனைத்து உயர்நிலை/மேல்நிலை பள்ளிகள் மற்றும் 10 மண்டல மையப்பள்ளிகள்ஆகியவற்றிற்கு **நகல் எடுக்கும் இயந்திரம் (Xerox Machine)** வழங்கப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்குத் திருப்புதல் தேர்வுகள் நடத்த மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

19. முதன் முதலாக British Council உடன் "**புதுமைப் பள்ளி திட்டம்**" என்ற திட்டத்தின்படி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஆங்கிலம், தலைமைப் பண்பு மற்றும் தகவல் தொடர்பு போன்றவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது.

20. சென்னை மாநகராட்சி மற்றும் அமெரிக்கத் தூதரகம் (US Consulate) இணைந்து **ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் போதிக்கும் முறைகள் பற்றிய பயிற்சி** அளிக்கப்பட்டன. இதன் மூலம் அனைத்து ஆசிரியர்களின் ஆங்கிலம் கற்கும் திறன் மேம்பட்டுள்ளது.

21. Tech Mahendra என்ற நிறுவனத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நம் சென்னை பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து இந்த ஆண்டும் இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

22. அறிவியல் மையங்கள் மண்டலத்திற்கு ஒன்று வீதம் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்த கல்வியாண்டில் **நடமாடும் அறிவியல் ஆய்வகம் 4 மையங்களில் தொடங்கப்பட்டு** 60 பள்ளிகளின் மாணவர்கள்

பயன்பெற உள்ளனர். மேலும் 10 பள்ளிகளில் **நிரந்தர அறிவியல் ஆய்வகங்கள்** அமைக்கப்பட்டுள்ளன.

**23.** 100% தேர்ச்சி விழுக்காடு பெற்ற 24 சென்னைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு **பள்ளி வளர்ச்சி நிதியாக தலா ரூ.1 லட்சத்திற்கான** காசோலை 15.08.2015 அன்று மேயர் அவர்களால் வழங்கப்பட்டது.

**24.** சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கத்தில் ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கு வசதியாக **நான்கு அறைகளில் குளிர் சாதன வசதி, அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்** அமைக்கப்பட்டுள்ளன.

**25.** மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கல்வித்துறையின் மீது கொண்ட மிகுந்த ஆர்வத்தால் அதன் மீது அதிக அக்கறை செலுத்தி பல்வேறு சீரிய முயற்சிகளால் அவர்கள் காட்டிய வழியில் சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயரும், கல்வித்துறையும் செயல்பட்டு இந்த ஆண்டு படிப்படியாக மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்து இந்த கல்வி ஆண்டில் (2015–2016) மட்டும் சுமார் 3000 மாணவர்கள் அதிகரித்துள்ளனர் என்பது சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சாதனையே ஆகும்.

**26. சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட 48 வகையான நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.**

1. மாநகராட்சி பள்ளியில் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா **மடிக்கணினி** ஒருவருக்கு ஒன்று வீதம் வழங்கப்படுகிறது.

2. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வீட்டிலிருந்து பள்ளி வருவதற்கு விலையில்லா **பேருந்து பயண அட்டை** வழங்கப்படுகிறது.

3. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு ஒரு பாடத்திற்கு ஒன்று வீதம் சத்துணவு உண்ணும் மற்றும் ஆதிதிராவிட மாணவ/ மாணவியர்களுக்கு விலையில்லா **நோட்டு புத்தகங்கள்** வழங்கப்படுகிறது.

4. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு அரசு பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு 4 செட் **சீருடைகள்** வழங்கப்படுகின்றன.

5. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வகுப்பு 1 முதல் 8ஆம் வகுப்பு வரை ஒரு ஜோடி **காலணிகள்** விலையில்லாமல் வழங்கப்படுகின்றன.

6. மாநகராட்சி பள்ளியில் 11ஆம் வகுப்புப் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு ஒருவருக்கு ஒன்று வீதம் மாணவர்களுக்கு ஆண்கள் ஓட்டத்தகுந்த **மிதிவண்டியும்**, மாணவியர்களுக்கு பெண்கள் ஓட்டத்தகுந்த மிதிவண்டியும் வழங்கப்படுகின்றன.

7. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்களில் வருவாய் ஈட்டும் **குடும்பத் தலைவரை இழந்த குழந்தைகளுக்கு வைப்பு நிதி** மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

8. மாநகராட்சி பள்ளியில் 6ஆம் வகுப்பில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு **புவியியல் வரைபடநூல்** வழங்கப்படுகிறது.

9. மாநகராட்சி பள்ளியில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா **புத்தகப்பை** வழங்கப்படுகிறது.

10. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ/மாணவியர்கள் அனைவருக்கும் விலையில்லா **பாடப் புத்தகங்கள்** வழங்கப்படுகின்றன.

11. மாநகராட்சி பள்ளியில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு **சத்துணவு** வழங்கப்படுகிறது.

12. மாநகராட்சி பள்ளியில் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு **கணித உபகரணப் பெட்டி** வழங்கப்படுகிறது.

13. மாநகராட்சி பள்ளியில் ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ/மாணவியர்களுக்கு இடை நிற்றலைக் குறைப்பதற்கான **சிறப்பு ஊக்கத்தொகை** வழங்கப்படுகிறது.

14. மாநகராட்சி பள்ளியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு **வண்ணப் பென்சில்கள்**, வண்ணகிரையான் மற்றும் பென்சில் வழங்கப்படுகிறது.

15. 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் வெற்றி பெற்று B.E., M.B.B.S., படிப்பில் சேரும் மாணவ/மாணவிகளுக்கு கலந்தாய்வின் போது ரூ.5,000/–மும், கல்லூரியில் சேரும் பொழுது ரூ.40,000/–மும், கல்வியாண்டு தொடக்கத்திலேயே **மேற்படிப்பு ஊக்கத்தொகை** வழங்கப்பட்டு வருகிறது. மற்ற

3 ஆண்டுகளுக்கும் ஆண்டுதோறும் ரூ.45,000/– வழங்கப்படுகிறது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேரும் 100 மாணவ/மாணவிகளுக்கு ரூ.7,000/–மும், ஆசிரியர் பயிற்சி, நர்ஸிங் பயிலும் 50 மாணவ/மாணவிகளுக்கு ரூ.10,000/–மும், சட்டம் பயிலும் 15 மாணவ/மாணவிகளுக்கு ரூ.10,000/–மும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

16. 10ஆம் வகுப்பில் 400 மதிப்பெண்கள் பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு 12ஆம் வகுப்பில் 1000 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற மாணவ/ மாணவியர்களுக்கும், மேலும் 100% மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கும் ரூ.1500/– **உயர் மதிப்பெண் ஊக்கத்தொகை** வழங்கப்படுகிறது.

17. 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் **மாநில அளவில் முதல் 3 இடங்களைப்** பெறும் மாணவ/மாணவிகளுக்கு ரூ.50,000/– ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

18. 12–ஆம் வகுப்பு மாணவர்கள் சிறந்த மதிப்பெண் மற்றும் **மாநில அளவில் தரவரிசை பெற** 4 மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

19. வரலாற்று சிறப்பு மிக்க இடங்களைக் கண்டு தம் பொது அறிவை வளர்த்துக் கொள்ள வழி செய்யும் வகையில் 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 50 மாணவர்கள் **வட இந்தியாவிற்கு சுற்றுலா** அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

**20.** சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் **11–**ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் நேரடி அனுபவம் பெறுவதற்காக **தொழில் நிறுவனங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.**

**21.** சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் **100% வருகையை ஊக்கப்படுத்தும் வண்ணம்** அவர்களுக்கு ரூ.1,000/– ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

**22.** அரசு பொதுத் தேர்வில் **சென்னை மாநகராட்சி அளவில் முதல் 3 இடங்களைப் பிடித்த** 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தலா ரூ.25,000/–, ரூ.20,000/– மற்றும் ரூ.15,000/– வழங்கப்படுகிறது.

**23.** தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை விலையில்லா **தேர்வு விடைத்தாட்கள்** வழங்கப்படுகிறது.

**24.** அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் +1 மற்றும் +2 வகுப்பில் பயிலும் அனைத்து மாணவ/மாணவியர்களுக்கும் விலையில்லா **செய்முறை பயிற்சி ஏடு** வழங்கப்படுகிறது.

**25.** மேல்நிலைப் பள்ளிகளில் +1 மற்றும் +2 வகுப்பில் பயிலும் அறிவியல் பிரிவு மாணவ/மாணவிகளுக்கு விலையில்லா **ஆய்வுக் கூட மேற்சட்டை** அளிக்கப்படுகிறது.

**26.** சென்னை மேனிலைப் பள்ளிகளில் கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டு **மாணவர்களின் பாதுகாப்பு** உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**27.** உட்கார்ந்த இடத்திலேயே உலக நடப்புகளை மாணாக்கர்கள் உணர்ந்து, தங்கள் தரத்தையும் பொது அறிவையும் மேம்படுத்திக் கொள்ள

வகுப்பிற்கு ஒரு பத்திரிகை வழங்கி **நாளிதழ் படிக்கும் பழக்கம்** சென்னைப் பள்ளிகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**28.** கூர்மையான அறிவைப் பெற்றிருந்தாலும் மனித நேயம் இல்லை என்றால் இவன் மரத்திற்கு ஒப்பாவான். ஆகவே, மாணாக்கர்களிடம் நற்பண்புகளையும் நல்ல மனித நேயத்தையும் வலுப்படுத்த **நற்பண்பு கல்வி** நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**29.** நோக்கியா செல்போனைப் பயன்படுத்தி பாடங்கள் கற்பிக்கும் முறை 48 பள்ளிகளில் நடைபெற்று வருகின்றன. இம் முறையின் மூலம் 5ஆம் மற்றும் 6ஆம் வகுப்பு மாணவர்கள் ஆங்கிலம் மற்றும் அறிவியல் பாடங்களை **நவீன தொழில் நுட்ப அடிப்படையில் கற்கின்றனர்.**

**30.** சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி தீவிர **விளையாட்டுப் பயிற்சி** அளிக்கப்படுகிறது.

**31.** மழலையர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் விலையில்லாச் **வண்ணச் சீருடைகளும், காலணிகளும்** வழங்கப்படுகின்றன.

**32.** அனைத்து மழலையர் வகுப்பு மாணவர்களுக்கும் விலையில்லா **புத்தகங்கள்** வழங்கப்படுகின்றன.

**33.** பள்ளி அளவில் **சதுரங்க விளையாட்டில்** ஆர்வம் மற்றும் திறமையுடைய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சதுரங்க பயிற்சியாளரைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**34.** மாணவர்களின் உடல்வளத்தைப்பேணி வளர்க்கும் விதத்திலும் சென்னைப் பள்ளி மாணவர்களுக்கிடையே **‘கபடி விளையாட்டுப் போட்டிகள்’**நடத்தி பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**35.** நீச்சல் ஆர்வமுடைய மாணவர்கள் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு சர்வதேசத் தரத்திலான **'நீச்சல் பயிற்சி'** அளிக்கப்படுகிறது.

**36.** சென்னைப் பள்ளிதோறும் 6ஆம் வகுப்பு முதல் **ஓட்டப் பந்தய வீரர்கள்** அடையாளம் காணப்பட்டு சென்னை மாநகராட்சி அளவில் பருவந்தோறும் தெரிந்தெடுக்கப்பட்டு அம்மாணவர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**37.** 9 முதல் 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவ–மாணவியருக்கு குடும்பம் மற்றும் சமூகத்தினால் ஏற்படும் மனஅழுத்தத்தைக் களையவும் வளர்இளம் பருவ மாணவியர்கள் எதிர்கொள்ளும் உடல், மனச் சிக்கல்களை அகற்றிடவும் தகுந்த பயிற்சி பெற்ற **'நலவாழ்வு ஆலோசகர்'** மூலம் சிறப்பு ஆலோசனை அளிக்கப்படுகிறது.

**38.** சென்னை பள்ளியில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு **கோ ஆப்டெக்ஸ்** நிறுவனம் மூலம் 2 செட் விலையில்லா **சீருடை** வழங்கப்படுகிறது.

**39.** சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு எழுத இருக்கும் மாணவர்கள் சிறப்பு வகுப்புகளில் மாலை நேரத்தில் சோர்வின்றி திறம்பட படிக்க சத்தான, **சுவையான சுண்டல்** வழங்கப்படுகிறது.

**40.** குழந்தைகள் விளையாடி மகிழ 30 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கண்கவர் **விளையாட்டுப் பூங்காக்கள்** அமைக்கப்பட்டுள்ளன.

**41.** ஒவ்வொரு மாணவனும் கணினி அறிவைக் கட்டாயம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் **6** முதல் **10**–ஆம் வகுப்பு வரை பயிலக் கூடிய அனைத்து உயர்நிலை/மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் **கணினி கல்வி** அளிக்கப்படுகிறது.

**42.** மாணவர்களின் பொது அறிவு, கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்த மாணவர்கள் தக்சின் சித்ரா, அருங்காட்சியகம், அறிவியல் நகரம் போன்ற இடங்களுக்கு **சிற்றுலா** அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

**43.** வளர் இளம் மாணவிகள் தங்கள் உடல் நலம் பேண சுகாதாரமான **சானேடரி நாப்பின்கள்** விலையில்லாமல் வழங்கப்படுகின்றன.

**44.** மாணவர்கள் எவ்வித இடையூறுமின்றி கல்விபயில அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் **ஒரு மின் ஆக்கி (Generator)** நிறுவப்பட்டுள்ளது.

**45.** தனியார் பள்ளிகளில் வழங்கப்படுவது போல சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் **நாட்குறிப்பேடு** வழங்கப்படுகின்றன.

**46.** பட்டம் பெற்ற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் தேவைக்கேற்பவும், சென்னை மாநகராட்சி பள்ளிகளில் இரண்டு இடங்களில் **போட்டித் தேர்வுக்கான வகுப்புகள்** தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**47.** கேட்பதை விட கண்ணால் காணும் போது கருத்து மனதில் நீடித்து நிலைக்கும் என்பதனால் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் வள வகுப்பறை **(Smart Class)** மூலம் கல்வி அளிக்கப்படுகிறது.

**48.** இசை மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பின்னி பிணைந்திருக்கும் ஒரு கலையாகும். முத்தமிழில் தித்திக்கும் சிறப்பு வாய்ந்த **இசை ஆற்றல்** மாணாக்கரிடம்தூண்டப்பட தொடர் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான **இசைக் கருவிகள்** பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## பொது சுகாதார துறை

### அம்மா உணவகம்

நோயற்ற சமுதாயத்தை உருவாக்கும் வகையிலும், சத்தான உணவுவகைகளை ஏழை எளிய மக்கள் மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், கட்டிட தொழிலாளிகள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணிபுரிபவர்கள் மற்றும் சென்னைக்கு பணிநிமிர்த்தமாக வந்து செல்பவர்கள் பயன் பெறும் வகையில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்குவதற்காக அம்மா உணவகங்கள் துவங்க உத்தரவிடப்பட்டு **282** அம்மா உணவகங்கள், கோட்டங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

### ஆயுஷ் மருந்தகம்

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிவிப்பின்படி சென்னை மாநகராட்சி மண்டலம் **1–15** மற்றும் ரிப்பன் வளாகத்திற்கு தேவையான, ஆயுர்வேதா, யோகா இயற்கை மருத்துவம்,யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி , ( Medical Officers ( Ayurvedha, Yoga & Naturopathy,

Unani, Siddha, Homeopathy ) வசதிகள் முதற்கட்டமாக கீழ்கண்ட இடங்களில் ஏற்படுத்தப்படவுள்ளது.

| **வஎண்** | **மண்டலம்** | **நகர்ப்புற சமுதாய நல மையங்கள்** |
|---|---|---|
| 1 | 5 | ரிப்பன் மாளிகை வளாகம் |
| 2 | 4 | மீனாம்பாள் நகர், நகர்ப்புற சமுதாய நல மையம் |
| 3 | 10 | லலிதாபுரம், மாநகராட்சி மருத்துவமனை |
| 4 | 13 | திருவான்மியூர், நகர்ப்புற சமுதாய நல மையம் |

***மாபெரும் மருத்துவ முகாம்கள்***

1000 சிறப்பு மருத்துவ முகாம்கள் 05.12.2013 முதல் 09.12.2013 வரையில் 5 நாட்களுக்கு தொடர்ந்து நடத்தப்பட்டு, இம்முகாம்களின் மூலம் 4 லட்சத்து 9 ஆயிரத்து 993 பயனாளிகள் பயனடைந்தனர். இந்த மருத்துவ முகாம்களில் கண்டறியப்பட்ட தொடர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை அருகில் உள்ள மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் பதிவு செய்யப்பட்டு, அவர்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையிலேயே தொடர் சிகிச்சை அளிக்கப்படுவதால் இந்நோய்களால் ஏற்படும் பல்வேறு பாதிப்புகள் குறைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மழைக்கால மருத்துவ முகாம்கள்**

11.11.2015 முதல் 12.01.2016 வரையில் 12,000 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 17 லட்சத்து 82 ஆயிரத்து 823 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 36,409 காய்ச்சல் கண்டவர்களுக்கும், 9,996 வயிற்று போக்கினால் பாதிக்கப்பபட்டவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்த

முகாம்களில் நிலவேம்பு குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது. **60,280** உப்பு நீர்க்கரைசல் பாக்கெட்டுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொற்றுநோய்கள் பரவுவது முற்றிலுமாக தடுக்கப்பட்டுள்ளது.

| **சென்னை மாநகராட்சியில் பொது சுகாதாரத்துறை சார்பில் 25.10.2011 முதல் இன்று வரை 24.02.2016 நடை பெற்ற மருத்துவ முகாம்களின் விவரம்** | | | | |
|---|---|---|---|---|
| வருடம் | மருத்துவ முகாம்களின் எண்ணிக்கை | ஆண்கள் | பெண்கள் | மொத்த பயனாளிகள் |
| 2011 | 686 | 36875 | 48881 | 85756 |
| 2012 | 991 | 62522 | 92182 | 154704 |
| 2013 | 1280 | 188711 | 255442 | 444153 |
| 2014 | 924 | 51143 | 73599 | 124742 |
| 2015 | 11697 | 743415 | 1026621 | 1770036 |
| 2016 | 918 | 40464 | 58958 | 99422 |
| மொத்தம் | 16,496 | 11,23,130 | 15,55,683 | 26,78,813 |

**2011** முதல் **2016 (25.02.2016)** வரையில் **16,496** முகாம்கள் நடத்தப்பட்டு **11** லட்சத்து **23** ஆயிரத்து **130** ஆண்கள் **15** லட்சத்து **55** ஆயிரத்து **683** முகாம்களில் மொத்தம் **26** லட்சத்து **78** ஆயிரத்து **813** பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

## ***தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம்***

## **நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

தேசியநகர்புற சுகாதார திட்ட வழிகாட்டுதல்களின்படி அனைத்து மருத்துவ வசதிகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக மருத்துவ சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, 50,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏற்கெனவே செயல்பட்டு வந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர நல மையங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 100 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கவும், விரிவாக்கப்பட்ட பகுதிகளில் 40 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 133 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 7 ல் கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

## **மாநகர சமூக நல மையங்கள் (Urban Community Health Centre)**

- சென்னை மாநகராட்சியில், தேசிய நகர்புற சுகாதார திட்ட வழிகாட்டுதல்களின்படி மருத்துவ வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு 2,50,000 மக்கள் தொகைக்கு ஒரு மாநகர சமூக மருத்துவ மையங்கள் (Urban Community Health Center) வீதம் ஏற்கெனவே உள்ள மாநகராட்சி பகுதிகளில் 7 மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் 8 புதிய மாநகர சமூக மருத்துவ மையங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதில் மண்டலம் 7 மற்றும் மண்டலம் 12ல் இரண்டு மாநகர சமூக நல மையங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.

**<u>கொசுக்கள் மற்றும் கொசுக்களால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துதல்</u>**

சென்னை மாநகரில் கொசுத்தொல்லை மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா மற்றும் யானைகால் நோய்களை தடுக்க முன்னெச்சரிக்கையாக சென்னை மாநகராட்சி பல வகைகளில் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

- பெரிய நீர்வழிப்பாதைகளான அடையாறு, கூவம், பி–கெனால், ஓட்டேரி நல்லா மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய்கள் மணல்மேடு, முட்செடிகள், புல் பூண்டுகள் மற்றும் ஆகாயத்தாமரை செடிகள் ஆகாய தாமரைகள் மற்றும் நீரில் மிதக்கும் உபயோகமற்ற பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன. இதற்கென 2013–14 ம் ஆண்டில் **<u>6.76</u>** கோடி ரூபாயும், 2014–2015 ம் ஆண்டில் **<u>4.71</u>** கோடி ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.
- கொசு தொல்லைகள் மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்க நீர்வழிப்பாதைகளின் ஓரங்களில் வசிக்கும் மக்களுக்கு **<u>ரூ. 9.97</u>** கோடி செலவில் **<u>5.89 லட்சம்</u>** கொசுவலைகள் வழங்கப்பட்டுள்ளன.
- சென்னையில் உள்ள சுமார் 17 லட்சம் வீடுகள் உள்ளது. இந்த வீடுகள் 3200 சிறு வட்டங்களாக (Sector) பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொறு சிறு வட்டமும் சுமார் 500 வீடுகளை கொண்டது. ஒவ்வொரு சிறு வட்டத்திற்கும் அனைத்து கொசு தடுப்பு வேலைகளையும் செய்ய ஒரு மலேரியா தொழிலாளி வீதம் 3200 பேர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். மலேரியா துறையில் தற்போது 3473 பணியாளர்கள் (நிரந்தர பணியாளர்கள்–1376 ஒப்பந்த பணியாளர்கள்–2097) பணிபுரிந்து வருகின்றனர்.

- மாலை நேரங்களில் குடிசைப்பகுதிகள் மற்றும் தெருக்களில் **42** வாகனங்களில் பொருத்தப்பட்ட பெரிய புகைபரப்பும் இயந்திரங்களை கொண்டும் , **365** கையினால் எடுத்துச் செல்லும் புகைபரப்பும் இயந்திரங்களை கொண்டும் தினசரி புகை பரப்பும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- **200** கோட்டங்களிலும் மழைநீர் வடிகால் கால்வாய்கள் மற்றும் திறந்த வெளி கால்வாய்களில் கழிவு நீர் தேங்கியிருக்கும் இடங்களில் மூடிகளை திறந்து வாரம் ஒருமுறை கொசுப்புழுக் கொல்லி மருந்து தெளிக்கப்பட்டு வருகின்றன.
- **200** கோட்டங்களிலும் மழைநீர் வடிகால்வாய்களில் முறையற்று சட்டவிரோதமாக இணைக்கப்பட்டிருந்த கழிவுநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.
- மண்டலங்களில் உள்ள காலி இடங்களில் (vacant site) தண்ணீர் தேங்கும் இடங்கள் கண்டறியப்பட்டு அங்கு கொசுப்புழு கொல்லி மருந்துகள் அடிக்கப்பட்டு கொசுக்கள் உற்பத்தியாகாதவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- கொசுக்களை இயற்கை முறையில் கட்டுப்படுத்த பொதுமக்களுக்கு **5.00** லட்சம் நொச்சிச்செடிகள் வழங்கப்பட்டுள்ளன.
- புதிய கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்கள், அங்கு தேங்கியுள்ள நீரில் கொசுபுழுக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டு கொசுக்கள் கட்டுப்படுத்தப்படுகிறது.
- பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஆண்டில் படத்துடன் கூடிய **15.00** லட்சம் துண்டறிக்கைகள்

விநியோகிக்கப்பட்டுள்ளன. தற்போது 10.00 லட்சம் துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

- 1000 டெங்கு விழிப்புணர்வு பேனர்கள் அச்சடிக்கப்பட்டு மக்கள் கூடும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.
- அனைத்து பள்ளிகளில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இறைவணக்கதின் போது 2560 விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கும், கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களும், அவற்றினை தடுப்பு முறை குறித்தும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது.
- காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நீலவேம்பு குடிநீர் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

**இச்சீரிய முயற்சிகளின் காரணமாக சென்னை மாநகரில் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை 2010ஆம் ஆண்டில் 9,789 ஆக இருந்து 2013இல் 5,166ஆகவும், 2014இல் 2962 ஆகவும், மற்றும் 2015 ஆகஸ்ட் வரை 1001 ஆகவும் குறைந்துள்ளது. டெங்கு காய்ச்சல் 2010இல் எண்ணிக்கை 392 இருந்து 2013இல் 133ஆகவும், 2014 இல் 137 ஆகவும் மற்றும் 2015 இல் 184, 2016ல் 25.02.2016 வரை 18 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.**

## ***வீடற்றோருக்கான காப்பகங்கள்***

### வீடற்றோருக்கான காப்பகம்

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி ஜூன் 2013 முதல் 28 வீடற்றோருக்கான காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இரவு நேர காப்பங்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன.

- தற்போது 31 காப்பகங்கள் இயங்கி வருகின்றன.
- மாநகராட்சி கட்டிடத்தில் – 24 காப்பகங்கள்
- தனியார் வாடகை கட்டிடத்தில் – 9 காப்பகங்கள்

இதில் புதிய காப்பகங்கள் அமைக்க 37 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு மொத்தம் 68 காப்பகங்கள் திறக்கப்பட உள்ளன. இந்த 37 காப்பகங்களில் 15 மாநகராட்சி கட்டிடத்திலும் 11 வாடகை கட்டடித்திலும் (மொத்தம் 26) ஆரம்பிக்கப்பட உள்ளது. மீதமுள்ள 11 காப்பங்களுக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

### திருத்தியமைக்கப்பட்ட காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்

சென்னை மாநகராட்சியில் திருத்திய தேசிய காசநோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 54 நுண்ணோக்கி மையங்கள் மூலம் சளி பரிசோதனை செய்யப்பட்டு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 85 விழுக்காடு நோயாளிகள் பூரண குணம் அடைந்துள்ளனர். சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரதுறையின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் எம்.டி.ஆர் மற்றும் எக்ஸ்.டி.ஆர் காசநோயாளிகளுக்கு மாதம் தோறும் ரூ.1000/ வழங்கப்பட்டுள்ளது.

காசநோய் கட்டுப்பாடு திட்டத்தின் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் சென்னை மாநகராட்சியின் (CUG Sim) மாண்புமிகு மேயர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காசநோய்க்கு சிகிச்சை பெறும் பயனாளிகளை தொடர்பு கொண்டு அவர்கள் விடுபடா வண்ணம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**<u>சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம்</u>**

சென்னை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் மூலம் சென்னை மாநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் அரசு, தனியார் மற்றும் தொண்டு நிறுவன கண் மருத்துவமனைகளைக் கொண்டு இலவச கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 3,858 முகாம்களின் மூலமாக 3லட்சத்து 75 ஆயிரத்து 228 பேர்களுக்கு கண் பார்வை குறைபாடு கண்டறியப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தில் 2011 முதல் 2015–ம் வரை அரசு தலைமை மருத்துவமனை கண் வங்கி மற்றும் தொண்டு நிறுவன கண் மருத்துவமனை வங்கிகள் மூலமாக கண்கள் தானமாகப் பெறப்பட்டுள்ளன. 13,544 தானமாகப் பெறப்பட்டுள்ள கண்கள் மூலமாக 6,468 கண் நோயாளிகள் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பயனடைந்துள்ளனர்.

இந்த வருடம் சென்னை மாவட்ட பார்வை இழப்பு சங்கத்தின் மூலம் சென்னை மாநகராட்சிகுட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் 596 பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் கண் பரிசோதனை செய்யப்பட்டு 6,000 விலையில்லா கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

***<u>பகுப்பாய்வு கூடங்கள்</u>***

சென்னை மாநகராட்சியில் 6 மருத்துவ பரிசோதனை கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு எக்ஸ்–ரே, இசிஜி,ஸ்கேன் மற்றும் ரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிவிப்பின்படி (எண்.39) சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து பகுப்பாய்வு கூடங்களிலும் 28.6.2014 முதல் அனைத்து பரிசோதனைகளும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் உயர்தர நவீன பரிசோதனை மூலம் நோய் கண்டறிந்து சிகிச்சை அளித்திட மிகப்பெரிய தனியார் மருத்துவனைகளில் உள்ளதுபோல் டிஜிட்டல் கலர் டாப்லர் அல்ரா சோனோ கிராம் கருவிகள் 5 எண்ணிக்கைகள் மாநகராட்சி பகுப்பாய்வு கூடங்களுக்கு ரூ.61 லட்சத்து 50 ஆயிரம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

***<u>தொற்று நோய் மருத்துவமனை</u>***

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் கீழ் தொற்றுநோய் மருத்துவமனை கடந்த 1914ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 3 ஆண்டுகளாக புதிய கட்டிடத்தில் 360 படுக்கை வசதியுடன் விரிவுபடுத்தப்பட்டு 24 மணி நேரமும் இயங்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட அனைத்து நோய்களுக்கும் சென்னை மாநகர மக்கள் மட்டுமல்லாமல் மற்ற மாவட்ட மக்களும் தங்கி தங்கள் நோய்களுக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சத்தான உணவு வழங்கப்பட்டு வருகிறது.

அவசர சிகிச்சைக்காகவும், அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கும், ஆம்புலன்ஸ் வாகன வசதி உள்ளது. புற நோயாளிகள் சிகிச்சை பிரிவும் இயங்கி வருகிறது. மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள், குடியிருப்பும் உள்ளது. உயிர் காக்கும் மருந்து மாத்திரைகளும், போதிய அளவில் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

***சிறப்பு மறுவாழ்வு மையங்கள்***

வடசென்னையில் சுமார் முப்பது லட்சம் மக்கள் தொகையை கொண்ட மக்கள் நெருக்கம் அதிகமுள்ள பகுதியாகும். வடசென்னையில் குடிப்பழக்கத்திற்கு அடிமையானோர்கள் பயன்பெறும் வகையில், அவர்களுக்கு சீரிய சிகிச்சை அளிக்க, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 50 படுக்கை வசதிகள் கொண்ட 2 வார்டுகள் சிறப்பு மறுவாழ்வு சிகிச்சை மையம், தொற்றுநோய் மருத்துவமனையின் வளாகத்தில் மாண்புமிகு மேயர் அவர்களால் **31.10.2014** அன்று துவக்கப்பட்டு சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

**கால்நடை சுகாதாரம்**

**பொது மக்கள் அளிக்கும் தெரு நாய்கள் குறித்த புகாரின் நடவடிக்கை**

சென்னை மாநகரில் தெருநாய்களின் தொல்லைகள் குறித்து பொது மக்கள் அளிக்கும் புகாரின் அடிப்படையில் **14** தெருநாய்கள் பிடிக்கும் வாகனங்கள் இயக்கப்பட்டு மற்றும் **42** நாய் பிடிக்கும் பணியாளர்கள் மூலம் தெருநாய்கள் பிடிக்கப்பட்டு அவற்றிற்கு இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றன

## இனக்கட்டுப்பாடு மையங்கள்

1. சென்னை மாநகராட்சி நாய் இனக்கட்டுப்பாடு மையம் அவ்வை சண்முகம் சாலை
2. சென்னை மாநகராட்சி நாய் இனக்கட்டுப்பாடு மையம் கண்ணம்மாபேட்டை

## கால்நடை பொது சுகாதாரம் மையம்

1. திரு.வி.க.நகர். செல்ல பிராணிகள் சிகிச்சை மையம் – மண்டலம்–6
2. நுங்கம்பாக்கம் செல்ல பிராணிகள் சிகிச்சை மையம் – மண்டலம்–9
3. கண்ணம்மாபேட்டை செல்ல பிராணிகள் சிகிச்சை மையம் – மண்டலம்–10

## செல்லப்பிராணிகளுக்கு உரிமம் வழங்குதல்

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை மூலம் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்க வருடத்திற்கு ரூ.50/–ஐ செலுத்தி உரிமம் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக சென்னை மாநகராட்சி வரிசை எண் பதித்த அலுமினிய நாய் உரிம வில்லை வழங்கப்படுகிறது.

## செல்ல பிராணிகளுக்கான மயான பூமி

இந்தியாவிலேயே முதன் முறையாக இறந்த செல்ல பிராணிகளை நல்ல முறையில் இலவசமாக அடக்கம் செய்ய சென்னை மாநகாட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் கீழ்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகிறது.

1. தென் சென்னை, மயிலாப்பூர், மயான பூமி
2. வட சென்னை, மூலகொத்தளம் மயான பூமி
3. மத்திய சென்னை, கண்ணம்மாபேட்டை மயான பூமி

**<u>தெரு நாய்களுக்கு மாபெரும் வெறி நோய்தடுப்பூசி போடும் திட்டம்</u>**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை மூலம் 15 மண்டலங்களில் உள்ள தெரு நாய்களுக்கும் வெறி நோய் தடுப்பூசி போட திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் (7,10,11,12,14,15,) 6 மண்டலங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>நவீன இறைச்சிக்கூடங்கள்</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை அளிப்பதற்காக கீழ்க்கண்ட நவீன இறைச்சி கூடங்கள் செயல்படுகின்றன.

1. பெரம்பூர் ஆடு/மாடு இறைச்சிக்கூடம்
2. வில்லிவாக்கம் ஆட்டிறைச்சிக்கூடம்
3. சைதாப்பேட்டை ஆட்டிறைச்சிக்கூடம்

**<u>மாவட்ட குடும்ப நலத்துறை</u>**

❖ அனைத்து 12 அறுவை அரங்குகளிலும், நோயாளிகளின் முக்கிய இயக்கங்களை அறியும் பல்நோக்கு நோக்கீட்டு (Multi Parameter Monitor)

கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. இது அறுவை சிகிச்சையின் போது நோயாளிகளின் முக்கிய இயக்கங்களை கண்காணிக்க மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

❖ அறுவை சிகிச்சை அரங்குகளை நோய் தொற்று இன்றி பாதுகாக்க புதிய NANO தொழில் நுட்பம் 8 அருவை அரங்குகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- இதய துடிப்பினை சரியான நிலைக்கு கொண்டு வரும் Defibrilator என்ற கருவியினை 12 அவசர பிரசவ கால மையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

  இதனால் நோயாளியின் இதயதுடிப்பை நிலையாக வைப்பதற்கு

  உறுதுணையாக உள்ளது.

- அனைத்து மண்டலங்களிலும் அவசர பிரசவகால மருத்துவமனைகளுக்கு

  ரூ.6,35,000 /– மதிப்புள்ள LCD Projectors with Screens மற்றும் திரையுடன்

  கூடிய திரைப்படக்கருவி தேவையான மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- அனைத்து 12 அவசர பேறுகால மையங்களுக்கு Nebulizer என்ற கருவி

  வழங்கப்பட்டுள்ளது இதனால் நோயாளிகளின் சுவாசம் சீராக இருப்பதற்க்கு

  உதவியாக உள்ளது.

**மின்துறை**

- பெருநகர் சென்னை மாநகராட்சியில் தற்போது உள்ள 15 மண்டலங்களில் 2,50,686 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில் மொத்த எல்.இ.டி விளக்குகளின் எண்ணிக்கை 1,54,464 ஆகும். மீதமுள்ள பழைய தெரு விளக்குகள் மாற்றப்பட வேண்டிய எண்ணிக்கை 96,222 ஆகும்.
- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 110 விதியின் கீழ் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு 1,10,000 எண்ணிக்கையில் புதிய

மின்சேமிப்பு வகை எல்.இ.டி.விளக்குகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதின் அடிப்படையில் ரூ.176 கோடியே 36 லட்சம் செலவில் 79,988 எண்ணிக்கையில் புதிய எல்.இ.டி விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 30,012 எல்.இ.டி. விளக்குகள் அமைக்கும் பணி ரூ.145 கோடியே 64 லட்சம் தற்போது பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் பழைய மண்டலங்களில் ஏற்கனவே உள்ள சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக புதிய மின் சிக்கன வகை விளக்குகள் 44,664 எண்ணிக்கையில் பொருத்தப்பட்டுள்ளன.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுவரை மொத்தம் 1,54,464 மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெருமின்விளக்குகள் அமைக்கப்பட்டு சுற்றுச்சூழலில் 88 சதவீதம் கார்பன் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக ஆண்டிற்கு தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின் கட்டணம் ரூ.66 கோடி செலுத்தப்பட்டது. தற்போது பொதுமக்கள் பயன் பெறும் வகையில் அதிக வெளிச்சம் தரக்கூடிய மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெருமின்விளக்குகள் மாற்றப்பட்டதால் ஆண்டிற்கு ரூ. 13 கோடியே 56 லட்சம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்துவது குறைக்கப்பட்டது. எதிர்காலத்தில் அனைத்து தெரு மின் விளக்குகளும் மின் சேமிப்பு வகை எல்.இ.டி தெரு மின் விளக்குகளாக மாற்றும் போது பெருநகர மாநகராட்சிக்கு இன்னும் பல கோடி ரூபாய் மின் செலவினம் குறைக்கப்படும். இந்த

வகையான தொழில் நுட்பம் இந்தியாவில் எந்த மாநகராட்சியிலும் இந்த எண்ணிக்கையில் (1,56,464) புதிதாக மின் சேமிப்பு வகை எல்.இ.டி தெரு மின் விளக்குகள் அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 35 கட்டிடங்களில் சூரிய ஒளி கூரை தகடுகள் மூலம் சூரிய சக்தி 66 kwp மின்சாரம் தயாரிக்க ரூ.65 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் 2011க்கு முன்பு 132 எண்ணிக்கையில் மட்டுமே வயர்லெஸ் கருவிகள் இருந்தது. சரியான தகவல் பரிமாற்றம் செய்ய இயலாத நிலையில் களப்பணிகள் தொய்வு ஏற்பட்டது. தற்போது ரூ. 2.61 கோடி செலவில் 1096 எண்ணிக்கையில் புதிய வயர்லெஸ் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டது. இதன் விளைவாக ஒரே நேரத்தில் அனைத்து களப்பணியாளர்களும் தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டு பொது மக்களின் புகார்கள் மற்றும் குறைகள் ஆகியவற்றை உடனுக்குடன் சரிசெய்யப்படுவதுடன் களப்பணிகள் விரைந்து செயல்படுத்த முடிகிறது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் கேபிள் டிவி / இன்டர்நெட் / ஒயர்கள் தடவாடகையாக 2000 முதல் 2011 வரை 8 நிறுவனங்களால் 1000 கிலோ மீட்டருக்கு ரூ. 99 லட்சம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் முறையாக தடவாடகை செலுத்தாததால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பெரும் நிதி இழப்பு ஏற்பட்டது. தற்போது கடும் நடவடிக்கை எடுத்ததின் பேரில்

2011–2015 ஆண்டில் மாநகராட்சியில் 1 முதல் 15 வரையிலுள்ள மண்டலங்களில் கேபிள் டி.வி / ஓ.எப்.சி / இன்டர்நெட் ஒயர்களை தீவிர ஆய்வு செய்து முறைப்படுத்தி உரிய அடையாள அட்டைகள் பொருத்தியும் சுமார் 5000 கிலோ மீட்டர் நீளத்திற்கு 52 சேவை நிறுவனங்களிடமிருந்து ரூ. 15 கோடி தடவாடகை வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரையிலும் ரூ. 14 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

- இதற்கு முன்னதாக 167 எண்ணிக்கையில் உயர் மின் கோபுர விளக்குகள் உபயோகத்தில் இருந்தது, தற்போது 375 எண்ணிக்கையில் உயர் மின் கோபுர விளக்குகள்பிரதான போக்குவரத்து சாலை சந்திப்புகள் மற்றும் மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளில் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது
- தெருமின் விளக்குகள் தானியங்கி முறையில் குறித்த நேரத்தில் ஆன் மற்றும் ஆஃப் செய்வதற்கு 3771 எண்ணிக்கையில் பொருத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. எதிர் காலத்தில் அனைத்து தெரு விளக்குகளுக்கும் இதே தொழில் நுட்பம் பயன் படுத்தப்படும்
- பெருநகர் சென்னை மாநகராட்சி விளையாட்டு திடல் மற்றும் பூங்காகளில் 13787 எண்ணிக்கையில் பூங்கா மின் விளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

- **மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை**

  **= 2 லட்சத்து 50 ஆயிரத்து 686**
- **மொத்த அளவிலான எல்.இ.டி. விளக்குகளின் எண்ணிக்கை**

  **= 1 லட்சத்து 54 ஆயிரத்து 464**
- **பழைய விளக்குகள் மாற்றப்பட வேண்டிய எண்ணிக்கை**

  **= 96 ஆயிரத்து 222**

**<u>லாபம்</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுவரை மொத்தம் **1** லட்சத்து **54** ஆயிரத்து **464** மின் சேமிப்பு வகை எல்.இ.டி. தெருமின்விளக்குகள் அமைக்கப்பட்டு சுற்றுச்சூழலில் **88** சதவீதம் கார்பன் குறைக்கப்பட்டதுடன் ஆண்டிற்கு ரூ. **13.56** கோடி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்தும் மின் கட்டணத்தில் குறைக்கப்பட்டது. எதிர்காலத்தில் அனைத்து தெரு மின் விளக்குகளும் எல்.ஈ.டி. தெரு விளக்குகளாக மாற்றும் போது மாநகராட்சிக்கு பல கோடி ரூபாய் செலவினம் குறைக்கப்பட்டு பொது மக்களுக்கு நல்ல வெளிச்சம் தரும் வகையில் இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

**<u>கணிப்பொறி மையம்</u>**

- அனைத்து கோப்புகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.
- புதிய நடைமுறையாக சென்னை மாநகராட்சியின் பணிகள் மற்றும் திட்டங்கள் அனைத்தும் “மின் ஒப்ப” திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும். இதன் மூலம் ஒப்பங்கள் வழங்குவது முதல் திறப்பது வரை அனைத்து நடவடிக்கைகளும் ஆன்லைன் (Online) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

- பொதுமக்கள், குடிநீர், கழிவுநீர் இணைப்பு, மின் இணைப்பு போன்ற இணைப்புகளைப் பெறுவதற்கான சாலை வெட்டு அனுமதியை பெறுவது எளிதாக்கப்பட்டு, தற்போது ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் முறை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இதனால், பல்வேறு முறைகேடுகள் தவிர்க்கப்பட்டு பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட சேவையை பெறுவதற்கு சாலை வெட்டுவதற்கான அனுமதி விரைந்து பெற தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>இயந்திர பொறியியல் துறை.</u>**

- பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள கழிவு செய்யப்பட்ட வாகனங்கள், தளவாடங்கள் மற்றும் இதர பயனற்ற கழிவு பொருட்களை பொது ஒப்ப ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது இந்நிலை மாற்றப்பட்டு முதன் முறையாக மத்திய அரசு நிறுவனமான M.S.T.C. Ltd (மெட்டல் ஸ்க்ராப்ஸ் டிரேடிங் கார்ப்பரேஷன் லிமிடட்) மூலம் வலைதளம் வாயிலாக இ–ஏலம் விடும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒளிவு மறைவற்ற ஏலப் பணி மேற்கொள்ளப்படுவதுடன் வெளி மாவட்ட மற்றும் மாநில அளவில் ஒப்பந்ததாரர்கள் பங்கேற்பதால் அதிக பட்ச விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

- முதன் முறையாக, பெருகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் பெரிய கால்வாய்கள், ஏரிகள் மற்றும் குளங்களில் மிதக்கும் ஆகாயத்தாமரை, பிளாஸ்டிக்குகள், சேறு சகதிகள் ஆகியவற்றை அகற்றி

நீரோட்டத்தை சீராக்கி, கொசு உற்பத்தியை முழுவதுமாக கட்டுப்படுத்திடும் பணிக்கு இயந்திரத்தினை ஈடுபடுத்திடும் வகையில் ஒரு எண்ணிக்கையில் நீரிலும் நிலத்திலும் செல்லக்கூடிய Amphibian Vehicle ரூபாய். 4 கோடியே 43 லட்சத்து 43 ஆயிரத்து 457/– க்கு கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. வாகனம் தயாரிக்கும் நிறுவனமான திருவாளர்கள்.அக்வாமெக் நிறுவனம் அமைந்துள்ள பின்லாந்து நாட்டிற்கு, துணை ஆணையர் (பணிகள் ) மற்றும் தலைமை பொறியாளர் (ம.நீ.வ.துறை) அவர்கள் நேரில் சென்று பெற இருக்கின்ற வாகனம் குறித்து முன்ஆய்வு மேற்கொண்டு வந்துள்ளனர். வாகனம் விரைவில் பெறப்பட்டு நீர்வழித்தடங்களை சுத்தப்படுத்தும் பணிக்கு வழங்கப்பட உள்ளது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முறையாக 1074 ஓட்டுநர்களுக்கு வாகனங்களை விபத்தின்றி இயக்குவதற்கு சாலை போக்குவரத்து நிறுவனம் (I.R.T.) மூலம் 2 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் ஓட்டுநர்கள் புத்தாக்கம் பெற்றதுடன் மற்றும் வாகனத்தை முறையாக பயனுள்ள வகையில் இயக்குவதற்கும் பயிற்சி வழங்கப்பட்டதால் வாகன இயக்கத்தால் ஏற்படுகின்ற விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முறையாக 20 ஆண்டுகளுக்கு மேல் எந்தவிதமான விபத்தும் இன்றி பணிபுரிந்த 119 ஓட்டுநர்களுக்கு அவர்களது திறமையான மற்றும் நீண்ட கால பணியினை பாராட்டியும் ஊக்குவித்தும் பாராட்டு பத்திரமும் 4 கிராம்

தங்க நாணயமும் வழங்கப்பட்டது. இதனால், மற்ற ஓட்டுநர்களும் முழு ஈடுபாட்டுடன் பணிபுரிய காரணமாக அமைந்துள்ளது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் முதல் முறையாக துப்புரவு பணி மற்றும் கட்டட இடிபாடுகளை அகற்றும் வாகனங்களுக்கு GPS உபகரணம் பொருத்தப்பட்டு, வாகனங்களின் பயன்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தூய்மைப் பணிக்கு அனுப்பப்படும் வாகனங்கள் புறப்பட்ட நேரம், , பணி செய்த வழிதடம், இயக்கப்படும் தூரம் , வாகனம் நிர்ணயிக்கப்பட்ட வழித்தடத்தில் பணி மேற்கொண்டது , தேவையில்லாமல் ஒரே இடத்தில் நீண்ட நேரம் நின்றது , நிர்ணயிக்கப்பட்ட நடை மேற்கொண்டது ஆகிய குறித்த விவரங்கள் கணிணி மூலம் நேரலையாக கண்காணிக்கப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் வாகன இயக்கத்தினை பயனுள்ள வகையில் ஈடுபடுத்தி நிர்ணயிக்கப்பட்ட பணியினை சிறப்பாக மேற்கொண்டும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக எரிபொருள் பயன்படுத்துவது தவிர்க்கப்படுவதுடன் எரிபொருள் விரயம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

- பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து ஓட்டுநர்களுக்கும் காலமுறை பரிசோதனை திட்டத்தினை கொண்டு வந்து, இதில் ஓட்டுநர்களுக்கு கண் பரிசோதனை, உடல் உறுப்பு பரிசோதனை மற்றும் ஸ்கேன், இரத்ததில் ஆல்கஹால் பரிசோதனை மற்றும் பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம்

ஓட்டுநர்களின் ஆரோக்கியம் பேணி காக்கப்படுவதால், ஓட்டுநர்கள் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றி வருகிறார்கள்.

- பெருநகர சென்னை மாநகராட்சி அச்சகத்தை நவீன படுத்தும் விதமாக முதன் முறையாக பிளக்ஸ் மெஷின் ,கம்போஸிங் மெஷின் மற்றும் காகிதம் வெட்டும் இயந்திரம் ஆகியவை ரூ. **69.35** இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- கடந்த **5** ஆண்டுகளில் இயந்திரப் பொறியியல் துறைமூலம் துப்புரவு மற்றும் பல்வேறு பணிகளுக்காக **432** எண்ணிக்கையில் பல்வேறு வகை வாகனங்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள்ரூ. **76.53** கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

# திடக்கழிவு மேலாண்மை துறை

1. **தொழில்நுட்பத்துடன் கூடிய கைபேசி (Smart phone)** :–

   சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, துப்புரவு பணியினை மேம்படுத்த அனைத்து துப்புரவு ஆய்வாளர்களுக்கும் புகைப்படம் எடுக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கைபேசி (Smart phone) வழங்கப்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு குப்பை தொட்டியும் குப்பை அகற்றப்பட்டதை அறியும் பொருட்டு புகைப்படம் எடுத்து அனுப்புவதை தலைமை இடத்திலிருந்து (Headquarters) கண்காணிக்கப்பட்டு வருகிறது.

2. **கைப்படிவ வானொலிப்பெட்டி (Walkie Talkie):–**

   சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, உயர் அதிகாரிகளுக்கும் துப்புரவுப் பணிகளை மேற்பார்வையிட உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோருக்கு **261**

எண்ணிக்கையில்(Walkie Talkie) கைப்படிவ வானொலிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக துப்புரவு பணிகளை கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கு (Walkie Talkie) கைப்படிவ வானொலிப்பெட்டி வழங்கப்பட்டு துப்புரவு பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

3. **<u>ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நியமித்தல்:–</u>**

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, ஒரு குறிப்பிட்டபணிக்குழுவாக (dedicated team) தலைமையகத்தில் உள்ள தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் நிலையில் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் துப்பரவு பணியினை ஆய்வு செய்யும் அதிகாரிகளின் பணிகளை ஒவ்வொரு வார்டிலும் மேலாய்வு செய்ய நியமிக்கப்பட்டுள்ளனர்.

4. **<u>குப்பை வளாகத்தை பசுமைப்படுத்தி மாசுக்கட்டுபாடு கொண்டுவருதல்:–</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகிய இடங்களில் தலா 200 ஏக்கர் அளவிற்கு குப்பை கொட்டும் வளாகங்கள் உள்ளது. இது தலா 50 இலட்சம் மெட்ரிக் டன் வீதம் ஏற்கனவே, குப்பைகள் சேகரிக்கப்பட்டு இருப்பில் உள்ளது. அன்றாடம் 5000 மெட்ரிக்டன் குப்பைகள் சேர்ந்த வண்ணம் உள்ளது. இதனால் நிலத்தடி நீர்வழி, நிலவழி மற்றும் காற்று வழி மாசிபடுவதை தடுப்பதற்கும் மேற்படி இரண்டு குப்பை கொட்டும் வளாகங்களில் அன்மையில் பெய்த பெரும் மழையை பயன்படுத்தி சுபாபுல் எனப்படும் சவுண்டல் மர விதைகளை விதைக்கப்பட்டு அவைகள் செழித்து வளர ஆரம்பித்துள்ளது. இதனால் சென்னை மாநகரின் பசுமை போர்வை அதிகரிக்க வாய்ப்புள்ளதுடன், சுபாபுல் எனப்படும் சவுண்டல் இலையானது கால்நடைகளுக்கு எதிர்காலத்தில் தீவனமாக பயன்படுத்தலாம்.

5. **<u>எரிவாயு தயாரிக்கும் பசுமை குடில் களன்கள்:–</u>**

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, **17** இடங்களில் ஒரு நாளைக்கு **0.75** டன் கொள்ளளவு கொண்ட சமையலறை கழிவுகளைக்கொண்டு எரிவாயு தயாரிக்கும் பசுமைக் குடில் களன்கள் அமைக்கும் பணியில் **9** களன்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், **8** இடங்களில் களன்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

6. **<u>குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தொழிலகம்:–</u>**

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப உதவியோடு மண்டலம் **6**, வார்டு **77**, புளியந்தோப்பில் **2.00** மெட்ரிக் டன் குப்பையிலிருந்து எரிவாயு அதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் தொழிலகம் ரூபாய். **50** இலட்சத்தில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் வேலங்காடு, ஓட்டேரி மற்றும் அத்திப்பட்டு பகுதிகளில் மூன்று தொழிலகத்திற்கான கட்டுமானப் பணிகள் ரூபாய்.**1.5** கோடியில் நடைபெற்று வருகின்றன.

7. **<u>கூவம் ஆற்றின் கரைப்பகுதி சுத்தம் செய்யும் பணி :–</u>**

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, சென்னை நதிநீர் சீரமைப்பு திட்டத்தின் கீழ் கூவம் ஆற்றின் கரைப்பகுதிகளை மேம்படுத்துவதற்கு, சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட துறைகள் மூலம் பணிகள் மேற்கொள்ள

- மழைநீர் வடிகால் துறை மூலம் மிதவை தடுப்பான் முறைகள் (Boom System) மூலம் மிதக்கும் கழிவுகளை அகற்றும் பணிக்கு ரூ. **1.00** கோடியும்,
- கட்டடத்துறை மூலம் எல்லை சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.**52** கோடியே **96** லட்சம்.
- பூங்கா துறை மூலம் பூங்காக்கள் மற்றும் பூங்கா நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.**39** கோடியே **87** லட்சம்.

- திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் திடக்கழிவு மற்றும் கட்டட கழிவு அகற்றும் பணிக்கு முதற்கட்டமாக (Short Term) ரூ. 7.13 கோடியும், இரண்டாம் கட்டமாக (Mid Term) ரூ. 1.48 கோடியும், மூன்றாம் கட்டமாக (Long Term) ரூ. 2.58 கோடியிலும் பணி மேற்கொள்ள நிதியினை அரசாணை எண். 9, நாள். 13.01.2015–ன்படி, முதற்கட்டமாக மேற்கண்ட துறைகளுக்கு மொத்தம் ரூ.100.96 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் முதல்கட்ட பணிக்குக் பணியாணை வழங்கி பணி நடைபெற்று வருகின்றது.

8. <u>குப்பையில்லா திட்டம் :–</u>

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, வார்டு 173ல் உள்ள அனைத்து தெருக்களிலிருந்து சேகரிக்கப்படும் மக்கக்கூடிய குப்பைகள் சாந்தோம் நெடுஞ்சாலையில் உள்ள எம்.ஆர்.சி. நகரில் கட்டுமான தொட்டிகளில் மக்கவைத்து உரமாக்கப்படுகிறது. இந்த திட்டம் 17.08.2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தில் தினசரி சுமார் 5 மெட்ரிக் டன் குப்பை உரம் தயாரிக்கப்படுகிறது. இந்த திட்டத்தில் தயாரிக்கப்படும் உரம் சென்னை மாநகராட்சியின் பூங்காக்கள் மற்றும் தோட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு, மாதிரி திட்டமாகும் (Pilot Project). இது பரவலாக்கப்பட்ட (Decentralized) குப்பை பதனிடுதல் திட்டமாகும். இதன் வெற்றிவாய்ப்பு பரிசீலனை செய்யப்பட்டு, மேலும் இது போன்ற திட்டங்கள் மண்டலத்தின் பிற பகுதிகளிலும் விரிவாக்கம் செய்யப்பட்டு, குப்பையில்லா நிலையினை (Zero Waste state) எய்த இயலும்.

9. <u>மக்கும் குப்பையினை பயன்படுத்தி உரம் தயாரிக்கும் திட்டம்:–</u>

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, 15 மண்டலங்களில் உள்ள 33 வார்டுகளில் இயற்கை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தினமும் சுமார் 60 மெட்ரிக் டன் குப்பையிலிருந்து 40 டன் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 5 வார்டுகளில் தினமும் சுமார் 6 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மண் புழு உரம் தயாரித்தல் முறையில் சுமார் 2 டன் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

10. <u>சாலை பணிகளுக்கு பிளாஸ்டிக் பயன்படுத்தும் திட்டம் :–</u>

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, 15 மண்டலங்களில் உள்ள பகுதிகளில் பகுதி வாரியாக சுமார் 40 பிளாஸ்டிக் வெட்டும் இயந்திரங்களைக் கொண்டு தினமும் குப்பையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவுகள் சுமார் 2400 கிலோவை சிறு துகள்களாக வெட்டி சென்னை மாநகராட்சி சாலைப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

11. <u>துப்புரவு பணி பற்றிய கருத்துப்பதிவு :–</u>

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, பொது மக்கள் தாங்களே மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மையின் ஒட்டுமொத்த செயல்திறனை உறுதிப்படுத்தும் விதமாக சென்னை மாநகராட்சியின் இணைய தளத்தில் “பொது மக்கள் துப்புரவு பணி பற்றிய கருத்துப்பதிவு” செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12. <u>பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் சாலை அமைத்தல்</u>

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.5.59 கோடி செலவில் கான்கிரீட் சாலைகள் மற்றும் இதர மேம்பாட்டு பணிகளும் மேலும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் ரூ.5.09 கோடி செலவில் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகங்களில் உள்ள குப்பை மேடுகளை மேம்படுத்தவும், சுற்றுசூழலை

பாதுகாக்கவும், இந்த வளாகங்களை சுற்றிலும் பல விதமான மூலிகை விதை செடிகள் மற்றும் ஆமணக்கு, பரங்கி செடிகள் மற்றும் தானிய வகை செடிகள் கொண்டு பசுமை வேலி (Green belt) அமைக்க, மேயர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**13. <u>குறுஞ்செய்தி சேவை</u>**

சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, திடக்கழிவு மேலாண்மை பணிகளைத் திறம்பட செயல்படுத்த ஏதுவாக, குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் செல்லும் விரிவான வழித்தட வரைப்படம் தயாரிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. களப்பணியாளர்கள் தங்கள் அன்றாட பணி குறித்த அறிக்கை தெரிவிக்கும் விதமாக குறுஞ்செய்தி சேவை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**14. <u>மருத்துவக் கழிவுகளை அகற்றும் முறை</u>**

சென்னை மாநகராட்சியில் சுமார் 821 மருத்துவமனைகள் உள்ளன. இதில் 803 மருத்துவமனைகள் அரசாங்கம்/தனியார் மருத்துவமனைகளும், 18 மருத்துவமனைகள் சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்படுகிறது. நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000இன் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகராட்சியில் முதன் முறையாக மருத்துவக் கழிவுகளை திடக் கழிவுகளோடு சேராதபடி தனியாக பிரிக்கப்படுகிறது. இரண்டு தனியார் நிறுவனங்கள் M/sTamilNadu Waste Management Limited, Kinnar Village. Madurantakam Taulk, Kancheepuram District, and M/s G.J.Multiclave (India) Pvt Ltd Thenmelpakkam Village, Chengalpattu Taulk, Kancheepuram District மூலம் மேற்கூறப்பட்ட அனைத்து மருத்துவ மனைகளிலிருந்து சேரும் மருத்துவக் கழிவுகளைத் தனியாக சேகரிக்கப்பட்டு எரித்து சாம்பலாக்கி அகற்றப்படுகிறது.

15. **<u>தீங்கு விளைவிக்கும் (Hazardous Waste ) கழிவுகள் (பட்டாசு கழிவுகள்</u>** சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக, (Industrial Waste Management Association) என்ற நிறுவனத்தின் கீழ் செயல்படும் TamilNadu Waste Management Limited கும்மிடிப்பூண்டியில் தீங்கு விளைவிக்கும் கழிவுகளைச் சேகரிப்பதற்கும் அதை முறையாக அகற்றுவதற்கும் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தோடு இணைந்து வருடாவருடம் தீபாவளி பண்டிகை நாட்களில் சேகரிக்கப்படும் தீங்கு விளைவிக்கும் பட்டாசு கழிவுகள் தனியாகச் சேகரிக்கப்பட்டு, 2014ஆம் ஆண்டில் சுமார் 43 மெட்ரிக் டன் குப்பைகள் கும்மிடிப்பூண்டியில் உள்ள குப்பை கிடங்கில் கொட்டப்பட்டு, அதில் அதிக அளவான மக்னீசியம் சல்பர் மற்றும் நைட்ரஸ் ஆக்சைடுகள் இருப்பதால் மேற்கூறப்பட்ட நிறுவனத்தின் மூலம் பட்டாசுக் கழிவுகளை முறையாக மூன்று விதத்தில் பிரிக்கப்பட்டு 1) Direct land fill 2) stablised landfill 3) Incinaration என பிரிக்கப்பட்டு Cement, Fly ash, மற்றும் Lime உடன் பட்டாசுக் கழிவுகளைச் சேர்ப்பதன் மூலம் 2500 calorific value குறைத்த பிறகே Direct land fill –க்கு சேர்க்கப்படுகிறது. இதனால் பட்டாசு குப்பைகளின் தீங்கு விளைவிக்கும் தன்மை வெகுவாகக் குறைக்கப்படுகிறது.

16. **<u>குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி வீடுகள் அமைந்துள்ள சுற்றுப்புறத்தை சுத்தம் செய்தல் :–</u>** தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பெருகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி கட்டிடங்களின் சுற்று புறங்களில் அளவுக்கு அதிகமாக சேர்ந்து இருந்த குப்பைகளினால் ஏற்பட்டும் சுகாதார பாதிப்பை தவிர்க்க தேசிய ஜவஹர்லால் நேரு நகர்புற மேம்பாட்டு திட்டத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சியால் பலகோடிகளில் தொகை வழங்கப்பட்டு தேங்கி இருந்த குப்பை மற்றும் கட்டிட கழிவுகள் முழுவதுமாக அகற்றப்பட்டது.

## பேருந்து சாலைகள் துறை

### உலகத்தரத்திலான கட்டமைப்புகளுடன் கூடிய நடைபாதைகள் பணி

பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை கருத்தில்கொண்டு பேருந்து சாலைகளில் உள்ள நடைபாதைகளை 5 அடியிலிருந்து 10 அடி அகலப்படுத்தி 15 செ.மீ உயரத்திற்கு சாலையின் நீளம் முழுவதும் ஒரே சீராக இருக்கும்படியும், இரு சக்கர வாகனங்கள் பயணிக்காவண்ணம் கிரானைட் தடுப்பான்கள் அமைத்தும் எளிதாக எறும் வகையில், சாய்தளம் உலக தரத்திற்கு சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ளது. பாதசாரிகளின் உரிமைகளை உறுதி செய்யும் பொருட்டு, குறிப்பாக சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான முதியோர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவ மாணவிகள் மற்றும் மாற்றுதிறனாளிகள் போன்றோர்களின் வசதிக்காக முதற்கட்டமாக 26 பேருந்து தட சாலைகளில் நடைபாதை மேம்பாட்டு பணிகள் ரூ.16 கோடிகள் செலவில் முடிக்கப்பட்டன.

இப்பணிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த பணிகளுக்காக சென்னை மாநகராட்சி பல்வேறு நிறுவனங்களிடமிருந்து (ஹட்கோ, வாய்ஸ் ஆஃப் இந்தியா தொண்டு நிறுவனம், இந்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம், இந்தியா டுடே பத்திரிக்கை, சஸ்டானியா முதலானவை) விருதுகளை பெற்றுள்ளது. இதனையடுத்து இரண்டாம் கட்டமாக 20 பேருந்து சாலைகளில் ரூ.47.70 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 10 பணிகளுக்கு ரூ. 9 கோடிகள் மதிப்பீட்டில் பணியாணை வழங்கப்படுகிறது.

அடுத்தக்கட்டமாக 48 நடைபாதை பணிகள் மேற்கொள்வதற்காக கலந்தறிஞர்கள் மூலம் வடிவமைப்பு பெறப்பட்டு நடைபாதை பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அனைத்து பேருந்து தட சாலைகளிலும் அகலமான நடைபாதைகள் படிப்படியாக அமைக்கப்படும்.

**<u>சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்</u>**

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் உட்கட்டமைப்பை உலகதரத்திற்கு இணையாக மேம்படுத்த தமிழக அரசினால் அறிவிக்கப்பட்ட சிறப்பான திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டமாகும். சென்னை மாநகராட்சி வரலாற்றிலேயே முதன்முறையாக இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சாலை பணிகளுடன் நடைபாதை அமைத்தல், மழைநீர் வடிகால்வாய் அமைத்தல், எல்.இ.டி தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் சேவை துறையினருக்கு கம்பி வடங்கள் செல்வதற்கான பிரத்யோக வழித்தடம் (Duct) அமைத்தல் போன்ற பணிகள் கிரிட் (Grid) போன்று ஒருங்கிணைத்து அமைக்கப்படுகின்றன.

இந்த சிறப்பு திட்டத்திற்காக கடந்த 4 ஆண்டுகளில் தமிழக அரசினால் ரூ.1488 கோடியே 3 லட்சம் நிதி சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டு ரூ.1274.57 கோடி மானியமாக வழங்கப்பட்டது. இதில் ரூ.1032 கோடி உட்புற சாலைகளை மேம்படுத்தவும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மேம்பாட்டிற்கும், ரூ.242.57 கோடி பேருந்து தட சாலைகள் மேம்பாட்டிற்கும் அனுமதிக்கப்பட்டது.

இதுபோன்றே நெட்வொர்க்கிங் என்ற அடிப்படையிலான சாலை அமைப்புகளுடனே இனிவரும் காலங்களில் சென்னை மாநகராட்சியின் அனைத்து சாலை பணிகளும் அமைக்கப்படும்.

இதுவரை சுமார் **934** கி.மீ. நீளமுடைய உட்புற சாலைகளும், **164** கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால்வாய்களும் **230** கி.மீ. நீளமுடைய நடைபாதை பணிகளும், **11939** எண்ணிக்கையிலான எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைக்கும் பணிகளும் சுமார் ரூ.**1072.83** கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள உட்புறச்சாலை சேவைத் துறையினரின் பணிகளால் தாமதமாகி இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இத்திட்டத்தின் வேகம் மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சென்னை மாநகராட்சி மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், **127.42** கி.மீ. நீளமுடைய **149** பேருந்து தடசாலைகள் புதுப்பிக்கும் பணி சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகிறது. இதுவரை **147** சாலை பணிகள் சுமார் **125.10** கி.மீ. நீளத்திற்கு ரூ.**189.03** கோடி செலவில் முடிவுற்றன. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

## <u>உலகத்தரத்திலான வடிவமைப்புகளுடன்</u>
## <u>நவீன வேகத்தடைகள் அமைத்தல் பணி</u>

ஏற்கனவே சென்னை மாநகரில் அமைக்கப்பட்டிருந்த வேகத்தடைகள் முறையான அளவுகள் இல்லாமல் தார் கலவைகள் கொட்டப்பட்டு ஒரு திண்டு போல் இருந்ததால் விபத்துக்கள் ஏற்பட்டன. எனவே, விபத்துக்களினால் ஏற்படும் பாதிப்புகளையும் உயிரிழப்புகளையும் தவிர்க்கும் பொருட்டு சீரான அளவுள்ள வேகத்டைகளை சாலைகளில் முறையாக அமைக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதின் அடிப்படையில்

இந்திய சாலைகள் ஆணையத்தின் (IRC) வழிகாட்டுதலின்படியும் வடிவமைப்பின்படியும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலை வேகத்தடைகளை மாற்றியமைக்கவும் புதிய வேகத்தடைகளை இரவில் ஒளிரும் ஸ்டட்ஸ் (Studs) பொருத்தப்பட்டு வெள்ளை நிறப் பெயிண்ட் அடிக்கப்பட்டு எச்சரிக்கை பலகைகளுடன் அமைக்கவும் சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் முற்கட்டமாக மண்டலம்–1 முதல் 15 வரை உள்ள பேருந்து தட சாலைகளில் வேகத்தடைகள் அமைக்கும் பணி மக்களின் கோரிக்கை மற்றும் மாநகர போக்குவரத்து கழகம் ஆகியவற்றின் கோரிக்கையின் அடிப்படையில் அந்தந்த மண்டல அலுவலர்கள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுவில் காவல் துறை உதவி ஆணையர் மற்றும் மாநகராட்சியின் பகுதி உதவி செயற்பொறியாளர்களின் பரிந்துரைகளின்படி குறிப்பிட்ட இடங்களில் வேகத்தடை அமைக்கப்படும். உட்புற சாலைகள் மற்றும் பேருந்து சாலைகளில் 2643 வேகத்தடைகள் இந்தியன் ரோடு காங்கிரஸ் வடிவமைப்பின் IRC வடிவமைப்பின்படி சுமார் ரூ. 25 கோடிகள் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

## எழில் மிகு மத்திய சாலைத் தடுப்பாண்கள் அமைக்கும் பணி

முந்தைய காலங்களில் அனைத்து பேருந்து சாலைகளிலும் கான்கிரீட் நடைபாதை கெர்புகளை வைத்து, வரிசையாக அடுக்கி மத்திய சாலைத் தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தது. இது உடைந்தும், மண்குவியல் சேர்ந்தும், அழுக்கு படிந்தும் மிகவும் அருவருக்கத்தக்க நிலையில் இருந்தது. இதை மாற்றி சாலைகளின் அகலத்திற்கு ஏற்ப நவீன வடிவமைப்புகளுடன் கூடிய தடுப்பாண்கள் பேருந்து சாலைகள் முழுவதும் அமைக்கப்பட்டு வருகிறது.

**60** அடிக்கு மேல் **80** அடி அகலமுள்ள சாலைகளில் கிரானைட் மத்திய தடுப்பாண்கள் அமைக்கப்பட்டு அதன் நடுவில் கண்ணிற்கு குளிர்ச்சியான எழில் மிகு செடிகள் வளர்க்கப்பட்டு வருகிறது. இந்த செடிகளை பாதுகாக்கும் வண்ணமும் மற்றும் கால்நடைகள் சேதப்படுத்தாமல் இருக்கும் வகையிலும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் கைப்பிடிகள் இந்த கிரானைட் மத்திய தடுப்பிற்கு மேல் அமைக்கப்பட்டு சாலைகள் புதிய பொலிவை பெற்று வருகிறது.

**60** அடிக்கும் குறைவான போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைகளில் இந்திய சாலைகள் சம்மேளனம் (IRC) வடிவமைப்புகளின்படி இரும்பு மற்றும் கான்கிரீட் கொண்டு கூம்பு வடிவிலான மத்திய தடுப்பாண்கள் அமைக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு மிளிரும் ஸ்டடக்கள் அமைக்கப்பட்டு இரவில் வாகனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது.

மேலும் **40** அடி அகலத்திற்கும் கீழான பேருந்து சாலைகளில் **1 1/2** அடி உயரமுள்ள கான்கிரீட் அடித்தளமும் மற்றும் **3 1/2** அடி உயரமுள்ள ஸ்டெயின்லஸ் ஸ்டீல் மத்திய தடுப்புகளுடன் கூடிய எழிலான மத்திய தடுப்பாண்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், முந்தைய காலங்களில் செங்கல் கட்டுமானம் கொண்டு அமைக்கப்பட்டிருந்த சிதிலமடைந்த போக்குவரத்து தீவு திட்டுகள் தற்போது நவீன முறையில் கிரானைட் கற்களைக் கொண்டும், அழகிய செடிகளை வளர்த்தும் எழிலாக அமைக்கப்பட்டுள்ளது. இடத்திற்கு ஏற்றாற்போல் நன்கு வளர கூடிய அழகான செடிகள் மற்றும் மரங்களை தேர்வு செய்வதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம்

மேற்கொண்டு சென்னை மாநகர் முழுவதும் பசுமையான சூழலை உருவாக்கும் சீரிய பணியை மேற்கொண்டுள்ளது.

## நவீன முறையில் கட்டப்படும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பேருந்து நிழற்குடைகள்

பெரு நகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் **1821** பேருந்து நிறுத்தங்கள் உள்ளது. இந்த நிறுத்தங்களின் பட்டியல் சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. இதில் நிறைய இடங்களில் பழைய கான்கிரீட் நிலையங்களாகவும், பழைய இரும்பு சட்டங்களிலான நிலையங்களாகவும் இருந்தது. இது சென்னை மாநகரின் பொலிவை கெடுக்கும் வகையிலும் பொது மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் விளங்கி வருகிறது. ஆகவே இவற்றை நவீன முறையில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. அதன்படி கடந்த ஐந்து வருட காலங்களில் சுமார் **555** பேருந்து நிழற்குடைகள் மூலதன நிதியின் மூலம் நவீனமாக்கப்பட்டுள்ளது. ரூ. **66** கோடிகள் செலவீனத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியார் நிதி மூலம் கட்டுதல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) என்ற முறையில் சுமார் **250** பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதே முறையில் சென்னை மாநகரில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் **400** இடங்களில் இத்திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டசபையில் விதி எண்.110ன் கீழ் அறிவித்த 510 பேருந்து நிலையங்களை இதே முறையில் அமைப்பதற்கு ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

## சாலை விரிவாக்க பணிகள்

சென்னை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலால் பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் தினந்தோறும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இச்சிரமங்களை போக்கும் வகையிலும் பொது மக்கள் பயன் பெறும் வகையிலும் **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சாலைகளை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன் அடிப்படையில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 2வது முழுமைத் திட்டத்தில் (Second Master Plan) தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதான சாலைகளையும் மற்றும் மாநகராட்சியால் அவசியம் மற்றும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் இதர சாலைகளையும் அகலப்படுத்துவதற்கான முயற்சிகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டு 14 முக்கிய சாலைகளை அகலப்படுத்தும் பணிக்கு முதற்கட்ட நடவடிக்கையான நில எடுப்பு அட்டவணை (Land Plan Schedule) தயாரிக்கப்பட்டது.

### சாலைகளின் விவரம்:

1. பேப்பர் மில்ஸ் சாலை
2. செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலை
3. காளியம்மன் கோயில் தெரு
4. நெல்சன் மாணிக்கம் சாலை
5. என்.எஸ்.கே சாலை
6. சாந்தோம் நெடுஞ்சாலை
7. ஸ்ட்ராஹன்ஸ் சாலை
8. டாக்டர் முத்துலஷ்மி சாலை (எல்.பி ரோடு)
9. கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை
10. கோடம்பாக்கம் சாலை
11. ஜெயராம் தெரு
12. மசூதி தெரு – மேற்கு சைதாப்பேட்டை
13. பெரம்பூர் பேரக்ஸ் சாலை
14. சர்தார் பட்டேல் சாலை

சர்தார் பட்டேல் சாலை விரிவாக்கத்திற்கு தேவையான இடத்தை தானமாக வழங்க CLRI நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைகழகம் முன்வந்துள்ளது. இதற்கான பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த 14 சாலைகளின் விரிவாக்கம் சம்பந்தமாக அரசின் கொள்கையளவு ஒப்புதல் பெற மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, பின்வரும் 10 முக்கிய சாலைகளை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**<u>புதியதாக விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ள சாலைகளின் விவரம்</u>**

1. சூளைமேடு நெடுஞ்சாலை
2. ராயப்பேட்டை நெடுஞ்சாலை
3. டாக்டர் நடேசன் சாலை
4. ஆர்.கே. மடம் சாலை
5. வேளச்சேரி பிரதான சாலை
6. புரசைவாக்கம் நெடுஞ்சாலை
7. அல்லி குளம் இணைப்புச் சாலை
8. கோடம்பாக்கம் நெடுஞ்சாலை
9. வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
10. அவ்வை நகர் மெயின் ரோடு

மேற்கண்ட சாலைகளை விரிவாக்கம் செய்ய நில எடுப்பு அட்டவணை (LPS) தயாரிக்கும் பணி தனியார் கலந்தாலுனர் மூலம் நடைபெற்று வருகிறது.

## பாலங்கள் துறை

- 2011 முதல் 2015 வரையிலான கடந்த 5 ஆண்டுகளில் 35 பாலப்பணிகள் ரூ.114.03 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
- கீழ்க்கண்ட 17 மேம்பாலங்கள் / பாலங்கள் / சுரங்கபாதைகள் / பெட்டக வடிவ பாலங்கள் ரூ.107.14 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- குழந்தைகள் விளையாடி மகிழ 30 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கண்கவர் **விளையாட்டுப் பூங்காக்கள்** அமைக்கப்பட்டுள்ளன.
- மேலும் 18 மேம்பாலங்கள் / பாலங்களில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் ரூ.6.89 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- நடப்பாண்டில் ரூ.19.78 கோடி செலவில் 16 பாலம் / மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கடந்த 5 வருடங்களில் புனரமைப்பு பணியாக 9 பாலங்களில் ரூ.1.10 கோடி செலவில் ஸ்டிரிப்சீல் எக்ஸ்பேன்சன் ஜாயின்ட்ஸ் பழுதுபார்த்து மாற்றியமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் டி.டி.கே.சாலை மேம்பாலத்தின் கைப்பிடியில் துருப்பிடிக்காத எஃகு (Stainless steel) மூலம் உறைப்பூச்சு பணி முடிவுற்றுள்ளது.

- மேலும், ரூ.2.09 கோடி மதிப்பீட்டில் 5 மேம்பாலங்களுக்கு எபாக்ஸி வர்ணம் தீட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- கடந்த 5 ஆண்டுகளில் 16 பணிகளுக்கான சாத்தியகூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இவற்றில் 6 பணிகள் மோனோ இரயில் திட்டம், மெட்ரோ இரயில் திட்டம், சாலை விரிவாக்கம் ஆகிய காரணங்களினால் நிறுத்தி வைக்கப்பட்டும் / கைவிடப்பட்டும் மீதமுள்ள 10 பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.
- மேற்கண்ட 10 பணிகளில் (1) துரைசாமி சுரங்கப்பாதை அணுகு சேவை பாலப் பணிக்கு பணி ஆணை வழங்கப்படவுள்ளது. (2) எண்ணூர் நெடுஞ்சாலை, மணலி சாலை ஒருங்கிணைந்த இரயில்வே மேம்பால பணிக்கு ஒப்பம் பரிசீலனையில் உள்ளது. (3) நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதை அணுகு சேவை பாலப் பணிக்கு மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (4) கொளத்தூர்–வில்லிவாக்கம் இரயில்வே மேம்பாலம் கட்டுமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பரிந்துரைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (5) தெற்கு உஸ்மான் சாலை மேம்பாலத்தை நீட்டித்து வடக்கு உஸ்மான் சாலை மேம்பாலத்துடன் இணைக்கும் மேம்பால மதிப்பீடு அரசின் அனுமதிக்கு அனுப்பப்படவுள்ளது. (6) ஈகா தியேட்டர் சந்திப்பு முதல் வள்ளுவர் கோட்டம் வரை மேம்பால வடிவமைப்பு சரிபார்க்கும் பணி இந்திய தொழில்நுட்ப கழகம், மெட்ராஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (7) மத்திய கைலாஷ் சந்திப்பு மேம்பாலம் இடைக்கால திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (8) பாதசாரிகள் சுரங்கப்பாதை (கோடம்பாக்கம் மீனாட்சி கல்லூரி, வடபழனி பேருந்து நிலையம் முன்பு)

வரைவு திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) **(9)** துர்காபாய் தேஷ்முக் சாலையில் ஆந்திரா மகிளா சபா அருகில் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன்முறையாக நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய பாதசாரிகள் நடை மேம்பாலம் மற்றும் எழும்பூர் இரயில் நிலையத்திலிருந்து காந்தி இர்வின் சாலை தெற்கு பக்கம் வரை ஏற்கனவே வரை இரயில்வே நடை மேம்பால நீட்டிப்பு பணிக்காக திட்ட ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிக்கு TNUIFSL மூலம் கலந்தறிதற்குரியவர் நியமிக்கப்பட்டு ஆய்வு துவங்கியுள்ளது. **(10)** வேளச்சேரி நெடுஞ்சாலையில் 100 அடி சாலை சந்திப்பு (ம) ஐந்து பர்லாங் சாலை சந்திப்பை கடந்து மேம்பாலம் அமைக்க TNUIFSL மூலம் கலந்தறிதற்குரியவர் நியமிக்கப்பட உள்ளார்.

- மேற்கொண்டு தகுந்த வடிவமைப்பு தேர்ந்தெடுப்பதற்கு திட்டம் தீட்டுவதற்கு முன்பே திட்டத்தின் மூலம் முழுமையான பயன்பெற கடந்த ஆட்சியில் நடைபெறாத கீழ்காணும் நிகழ்வுகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

    1. பல்வேறு தொழிற்நுட்ப வல்லுநர்கள் மூலம் பரிசீலிக்கும் கூட்டம் மேற்கொண்டு பல்வேறு நிலைகளை கடந்து இறுதியாக தகுந்த பொது ஒழுங்கு வரைபடம் நிர்ணயிக்கப்படுகிறது.
    2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் குறிக்கோளான மக்களால் நான், மக்களுக்காக நான் என்ற சிந்தனையின் அடிப்படையில் மேம்பாலம் / சுரங்கப்பாதையின் ஆய்வுப் பணிகளின் பொது ஒழுங்கு வரைபடத்தை மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தி, மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்து,

அவற்றின் அடிப்படையில் பொது ஒழுங்கு வரைபடம் மாற்றி அமைக்கப்படுகிறது

3. ஒப்பம் கோருவதற்கு முன்னரே தேர்ந்தெடுக்கப்பட்ட பொது ஒழுங்கு வரைபடத்திற்கான வடிவமைப்பை ஐ.ஐ.டி.சென்னை வல்லுநர்கள் மூலம் சரிபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
4. மேம்பால திட்ட ஆய்வின்போதே சாலை விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது.
5. இவ்வாறு மேற்குறிப்பிட்ட பல்வேறு அம்சமங்களை உள்ளடிக்கிய ஆய்வுகள் மற்றும் பரிசீலனைகள் மேற்கொண்டு, பல்வேறு நிலைகளைக் கடந்து, திட்ட அறிக்கை தயாரிக்கப்படுவதால் தான், காலதாமதம் ஏற்படுகிறது. மேலும், மேம்பாலத்தின் அமைப்பு மற்றும் இதர அம்சங்கள் சிறப்பாக அமைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
6. கடந்த ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட எல்லா பாலங்களுமே முழுமையான பலனை தராமல் கட்டி முடிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை அந்த பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாவதற்கு காரணமாக உள்ளதே தவிர போக்குவரத்து நெரிசல் குறைந்த பாடில்லை. உதாரணமாக. தியாகராய நகர் உஸ்மான் சாலை மேம்பாலம் மற்றும் அடையாறு மேம்பாலம் போன்று சரிவர மக்களுக்கு பயன்படாமல் திட்டமிட்டது.
7. கடந்த 2001–2006ம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில் 6 பணிகளுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் இருந்தன. தயார் நிலையில் இருந்த இந்த 6 பணிகளில் கூட கடந்த 2006 – 2011 ஆட்சியில்

ஜோன்ஸ் சாலை வாகன சுரங்கப்பாதை, ஆலந்தூர் சாலை உயர்மட்ட பாலம் இரண்டு மட்டுமே கட்டி முடிக்கப்பட்டு மற்ற இரங்கராஜபுர மேம்பாலம், கத்திவாக்கம் காக்ரேன் இரயில்வே மேம்பாலம், மணியக்கார சத்திர தெரு வாகன சுரங்கப்பாதை, வில்லிவாக்கம் வாகன சுரங்கப்பாதை ஆகிய நான்கும் பணி துவக்க நிலையிலேயே முடிவடையாமல் விடப்பட்டன. கட்டி முடிக்காமல் விடப்பட்ட நான்கு பணிகளில் உள்ள குறைபாடுகள் அனைத்தும் சரிசெய்யப்பட்டு 2 வாகன சுரங்கப்பாதை மற்றும் ஒரு மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்காக அற்பணிக்கப்பட்டுள்ளது. இதில் கத்திவாக்கம் காக்ரேன் இரயில்வே மேம்பாலம் கட்டிமுடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்கரங்களால் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

8. இவ்வாறான உண்மைகளை மறைத்து நாங்கள் ஏதோ பாலம் கட்டவில்லை, பாலம் கட்டவில்லை என பொய்யான தகவலை பரப்பி வருபவர்களுக்கு மேற்கண்ட புள்ளி விவரங்கள் பதிலாக வைக்கப்படுகிறது.

**<u>மழைநீர் வடிகால்வாய் துறை</u>**

**<u>கடந்த  நான்கரை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்</u>**

➢ கடந்த 41/2 ஆண்டு காலத்தில் மழைநீர் வடிகால் துறையின் மூலமாக 329 கி.மீ நீளத்திற்கு ரூ.488.51 கோடி செலவில் 726 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டு தற்போது சிறந்த முறையில் பயன்பாட்டில் உள்ளது.

**<u>நடைபெறும் பணிகள்</u>**

➢ பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைப்பதற்கு 1069 கீமி நீளத்திற்கு ரூ.4034 கோடி மதிப்பீட்டில் கால்வாய்(கெனால்) பணிகள் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் (டிரெயின்ஸ்) பணிகள் கட்டுவதற்கு மேற்கொள்ளப்பட உள்ளன. முதற்கட்டமாக உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் அடையாறு மற்றும் கூவம் வடிநில பகுதிகளில் 270 கீமீ நீளத்திற்கு ரூ.1101.43 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

➢ மண்டலம்–1,9,10,11,12,13,14 ஆகிய பகுதிகளில் 7 கி.மீ நீளத்திற்கு ரூ.15.71 கோடி மதிப்பீட்டில் 15 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால்வாய் பணி நடைபெற்று வருகிறது.

**<u>மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்</u>**

- மண்டலம்–4, 8, 10 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் 11.71 கீ.மி. நீளத்திற்கு ரூ.54.33 கோடி மதிப்பீட்டில் 23 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

- **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மழைநீர் சேகரிப்பு அமைப்பை மேலும் சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு புதிய வடிவமைப்புடன் கூடிய மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து அலுவலக கட்டிடங்கள் , பள்ளி கட்டிடங்கள் ,சுகாதார நிலையங்கள், சத்துணவு கூடங்கள் , வணிக கட்டிடங்கள், உடற்பயிற்சி கூடங்கள்,பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், கோயில் குளங்கள் மற்றும் சாலை ஓரங்களில் இதுவரை 9972 எண்ணிக்கையில் ரூ.14.50 கோடி செலவில் அமைக்கப்பட்டு தேங்கும் மழைநீர் சேமிக்கப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- **கணேசபுரம் சுரங்கப்பாதையில் மழைநீர் தேங்கா வண்ணம் நடவடிக்கை எடுத்தல்**

சென்னை மாநகராட்சிப் பகுதியில் 13 சுரங்கப்பாதைகள் அமைந்துள்ளன. அதில் கணேசபுரம் சுரங்கப்பாதையில் மழை காலங்களில் சுமார் ஒரு வார காலத்திற்கு மழைநீர் தேங்கி பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருந்து வந்தது .அந்த நிலையை தற்போது மாற்றி அமைத்து

பெருமழைக் காலங்களில் சுரங்கப்பாதையில் தேங்கும் நீரை ரூபாய் **35.74**இலட்சம் செலவில் கீழ்மட்ட தொட்டி அமைத்து அதிலிருந்து **50** குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் மூலம் வெளியேற்றி நேரடியாகக் குழாய்கள் மூலம் ஓட்டேரி நல்லாவில் கொண்டு செல்லப்பட்டு சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்காவண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது சிறந்த முறையில் பயன்பாட்டில் உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- **மழைநீர் வடிகால்வாய்களில் "நுழைவாய்கள்"( Inlets) அமைத்தல்**

பேருந்து சாலைகளில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு மழைநீர் வடிகால்வாய் கட்டமைப்பின் முகத்துவாரத்தில் Silt catch pit 973 எண்ணிக்கையிலும் மற்றும் vertical Grating (ஜல்லடை) **4444** எண்ணிக்கையில் ரூ.**50** இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பேருந்து சாலைகள் பழுதடையா வண்ணம் பாதுகாக்கப்படுகிறது.

- **நடமாடும் நீர்மூழ்கி தூர் உறிஞ்சும் பம்பு செட்டுகள் மூலம் மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள தூரினை அகற்றுதல்**

**2014**ஆம் ஆண்டிற்கு பிறகு உச்சநீதி மன்ற ஆணையின்படி மனித நுழைவாயில்களில் இறங்கி ஆட்களைக் கொண்டு தூர்வாரப்படுகிறது முழுவதுமாக தடை செய்யப்பட்டமையால் மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள தூரினை அகற்ற வாட்டத்திற்கு ஒன்று என்ற வீகிதத்தில் **10** குதிரை திறன் கொண்ட மூன்று நடமாடும் நீர்மூழ்கி தூர் உறிஞ்சும் பம்பு செட்டுகள் ரூ.**7**கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நீர் தேக்கம் இல்லாமல் மழைநீர்

வடிகால்வாய்களில் மழைநீர் வெகுவாக செல்ல வழிவகை செய்யப்பட்டு உள்ளது .

- **உயர் அழுத்த தூர் வாரும் இயந்திரம் மூலம் மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள தூரினை அகற்றுதல்**

2015ஆம் ஆண்டில் மழைநீர் வடிகால்வாய்களில் தூர் அகற்றும் பணி முழுவதுமாக இயந்திரமயமாக ஆக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புடன் கூடிய உயர் அழுத்த தூர் உறிஞ்சும் இயந்திரங்களுடன் கூடிய வானங்களை கொண்டு முதல் முறையாக சென்னை மாநகராட்சி பிரதான சாலைகளில் உள்ள தூரினால் முழுவதுமான அடைப்பட்ட வடிகால்வாய்களில் தூர் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு இதுவரை 15000 மெட்ரிக் டன் அளவிற்கு ரூ.5.79கோடி செலவில் தூர் அகற்றப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் இவ்வகை இயந்திரங்களை கொண்டு தூர்வாரும் பணிகள் முதன்முறையாக துவங்கப்பட்டுள்ளது என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும் இவ்வகை இயந்திரங்கள் கொண்டு தூர் அகற்றும் பணிகள் இந்தியாவில் ஒரிரு நகரங்களில் மட்டுமே பின்பற்றப்படுகிறது என்பது குறிப்பிடதக்கது.

- **கொசு உற்பத்தி தடுக்கும் விதமாக ஆகாய தாமரை மற்றும் மிதக்கும் குப்பை அகற்றும் பணி**

முதன்முறையாக சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட நீர் வழி கால்வாய்கள் மற்றும் ஆறுகளில் கொசு உற்பத்தி தடுக்கும் விதமாக ஆகாய தாமரை மற்றும் மிதக்கும் குப்பை அகற்றுவதற்காக நவீன மிதவை மற்றும் பொக்லைன் இயந்திரங்களை கொண்டு 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் 3.60 சதுர கிமீ பரப்பளவிற்கு, ரூ18 கோடி செலவில், இம்முறையில் பணிமேற்கொள்ளப்பட்டதால் கொசு உற்பத்தி குறைக்கப்பட்டு சுகாதார சீர்கேடுகள் தவிர்க்கப்பட்டது என சுகாதார துறை மூலம் சான்று அளிக்கப்பட்டது.

**பணித்துறை**

- ஆணையாளர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களால் 80 ச. மீ பரப்பளவிற்கு கீழே உள்ள மனைகளை ஆய்வு செய்து திட்ட அனுமதி வழங்குவதற்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரப் பகிர்விற்கு முன்னர் 80 ச.மீ பரப்பளவிற்கு கீழே உள்ள மனைகளுக்கு சென்னை மாநகராட்சியில் ஒப்புதல் வழங்க இயலாத நிலை இருந்தது. இந்த அதிகாரப் பகிர்விற்கு பிறகு 80 ச.மீ பரப்பளவிற்கு கீழே உள்ள மனைகளுக்கும் சென்னை மாநகராட்சியிலேயே ஒப்புதல் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் அதிகாரப்பகிர்வு அளிக்கும் பொழுது, 80 ச.மீ பரப்பளவிற்கு கீழே உள்ள மனைகளில் நிலத்தடி நீர்ப்பிடிப்பு பகுதி தவிர்த்து ஒப்புதல் வழங்கும் பொழுது எந்த விதமான மேல் அளவும் நிர்ணயிக்காமல் விண்ணப்பத்தின் தன்மைக்கு ஏற்ப ஒப்புதல் வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் 80 ச.மீ பரப்பளவிற்கு கீழே உள்ள மனைகளில் பொது மக்கள் ஒப்புதல் பெற்று வீடு கட்டும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

- கட்டிட வரைபட அனுமதி அளிக்கும் முறையினை எளிமையாக்கப்பட்டு புதிய ஆன்லைன் நடைமுறையில் ஒப்புதல் வழங்கும் முறை 01.07.2013 முதல் நடைமுறையில் உள்ளது. இம்முறையில் விண்ணப்பதாரருக்கு, ஒப்புதல் அளிக்கும் நடைமுறையில் எடுக்கப்படும் ஒவ்வொரு நிகழ்வுகளும் உடனுக்குடன் குறுஞ்செய்தி /மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது.

  இதற்கு முன்னர் விண்ணப்பதாரர் தங்களுடைய விண்ணப்பத்தின் நிலையினை அறிய விரும்பினால் நேரடியாக சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வர வேண்டிய நிலை இருந்தது.

  இந்த புதிய முறையில் விண்ணப்பதாரர் தங்களின் இருப்பிடத்தில் உள்ளவாறே விண்ணப்பத்தின் நிலையினை அறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- நகரமைப்பிற்கு என்று ஒரு தனி பிரிவு ஏற்படுத்தி, கட்டிட வரைபடங்களுக்கான அனுமதி வட்டார அலுவலகத்திலேயே வழங்குவதற்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டு, தற்பொழுது வட்டார

அலுவலகத்தில் உள்ள நகரமைப்பு பிரிவின் மூலம் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கு முன்னர் கட்டிட அனுமதி, சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில், மண்டல செயற் பொறியாளர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டு வந்தது. பல்வேறு பணிகளுக்கு இடையில் ஒப்புதல் வழங்கும் பணி நடைபெற்று வந்தது.

தற்பொழுது, நகரமைப்பிற்கு என்று ஒரு தனிப்பிரிவு உருவாக்கப்பட்டு, கட்டிட அனுமதி வழங்கப்படுவதால், பொது மக்களுக்கு விரைவாக அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**<u>பூங்காத்துறை</u>**

- ❖ நீர் வழிதடங்களில் மண் அரிப்பிணை தடுக்கவும் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு பயன்கள் தரக்கூடிய **20** லட்சம் பனைமரவிதைகளை நடுவதற்கு திட்டமிடப்பட்டு, **6.5** லட்சம் பனைமரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன.
- ❖ பூங்காக்களில் மூலிகை செடிகள் வளர்க்கப்படுகின்றன.
- ❖ கொசுப் பெருக்கத்தை இயற்கையாக தடுப்பதற்காக **5** இலட்சம் நொச்சி செடி வழங்கப்பட்டுள்ளன.
- ❖ மாநகராட்சியில் மொத்தம் **503** பூங்காக்கள் உள்ளன. இதில் 243 பூங்காக்கள் **2011** முதல் **2016** வரை 60 கோடியே **19** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்டுள்ளன. மேலும் **57** பூங்காக்களின் பணிகள் ரூ. **37**

கோடியே **81** லட்சம் செலவில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

- ❖ சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்களில், பொதுமக்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்திற்காக நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது புத்துணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் மெல்லிய இசையினை பரப்ப இசைப்பரப்பும் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ பூங்காக்களில் நடைபயிற்சி மேற்கொள்ளும் பொது மக்கள் மேலும் புத்துணர்ச்சி அடைவதற்கு இயற்கையான முறையில் அக்கு பிரஷர் சிகிச்சை பெறுவதற்காகக் கூழங்கற்களால் ஆன நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**<u>நிதி மேலாண்மை குழுமம்</u>**

- ❖ தணிக்கைத்துறையை முந்தைய நிர்வாகம் தங்கள் இயலாத வசதிக்காக அதை சரியான முறையில் செயல்படுத்தாமல் இழப்பு ஏற்படுத்திய அதிகாரிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் தணிக்கைத்துறையை செயல்படாத துறையாக மாற்றி மாநகராட்சிக்கு ரூபாய் **5** ஆயிரத்து **86** கோடியே **56** இலட்சம் இழப்பை ஏற்படுத்தி இருந்தார்கள். இப்போது மாநகராட்சி இழப்பு ஏற்படாமல் தணிக்கைத் துறை சுட்டிக் காட்டிய தணிக்கைத் தடைக்கு காரணமான அலுவலர்கள் மீது பணியில் இருந்து ஓய்வுபெறும் முன்பே நடவடிக்கை எடுத்ததினால், பணியில் இருப்பவர்கள் தங்கள் பணிகளை சரியாக செய்வதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

- ❖ முந்தைய ஆட்சியாளர்களால் தணிக்கைத்தடை நீக்கம் செய்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்வதில் உள்ள தாமதம் களையப்பட்டு இதுவரை **5295** தணிக்கை தடைகள் ரூ.**401.11**கோடி மதிப்பிலானது பல்வேறு ஆக்கபூர்வமான துரித நடவடிக்கைகளால் நிலுவையில் உள்ள தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டு வந்துள்ளது. நாளது தேதி **(26.02.2016)**இல் **4685.45** கோடி மதிப்பிலான **26129** தணிக்கைத் தடைப்பத்திகள் நிலுவையில் உள்ளது. இத்தணிக்கைத் தடை நிலுவை பத்திகளை வெகுவாக குறைத்திட ஏதுவாக மாதந்தோறும் கூட்டமர்வுகள் மற்றும் மறு ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு தணிக்கை தடை நிலுவை ஏதும் இல்லை என்ற நிலைப்பாட்டிற்கு கொண்டுவர சீரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**<u>வருவாய்த் துறை</u>**

**<u>சொத்து வரி</u>**

- பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து கட்டிடங்களையும் சொத்துவரி விதிப்பின் கீழ் கொண்டு வரும் பொருட்டு புவிச்சார்ந்த தகவல் அமைப்பு (GIS Maping) மூலமாக செயற்கோள் துணைக் கொண்டு அளவீடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு

வருகிறது. இதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் அதிகரிக்கும்.

- சொத்துவரி மதிப்பீடு வெளிப்படையாக மேற்கொள்ள தலைமை அலுவலகத்தில் உயர்மட்டக் குழு ஒன்று, 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, இதன் மூலம் 1,55,360 சொத்து வரி மதிப்பீட்டு ஆணைகள் கட்டட உரிமையாளர்களுக்கு விரைவாக அளிக்கப்பட்டுள்ளது.
- கட்டட உரிமையாளர்கள், இணையதள வசதியினை பயன்படுத்தி, அவர்களுக்கு சொந்தமான கட்டடங்களுக்கு அவர்களே சொத்துவரி மதிப்பீடு (Self Assessment Scheme) செய்து, ஆணையினை பெற மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது பரிசோதனை அடிப்படையில் உள்ளது.
- இணையதள வசதியினை பயன்படுத்தி, சேவைக் கட்டணம் ஏதுமில்லாமல், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொத்துவரியினை செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- பெருகிவரும் தேவைகளுக்குகேற்ப மக்கள் சேவைகளை செயல்படுத்திட நிதி ஆதாரங்களை மேம்படுத்திட, பொதுமக்கள் சிரமமின்றி வரி செலுத்த ஏதுவாக கடந்த 3 ஆண்டுகளில், 10 வங்கிகளின் ( Walk in payment ) மூலம் சொத்துவரி செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வங்கிகள் இணையதள வசதியினை பயன்படுத்தி, சொத்துவரி பெற்றதற்கான ரசீதினை உடனடியாக வழங்கும்.

- சொத்து வரி வசூலினை தீவிரப்படுத்திட, சொத்துவரி செலுத்தும் உரிமையாளர்களுக்கு உடனடியாக ரசீதுகள் வழங்க ‘‘இணையதள தொடர்பு வசதி கொண்ட கையடக்க கருவிகள்’’ அனைத்து வரி மதிப்பீட்டாளர்கள் மற்றும் வரி வசூலிப்பாளர்களுக்கு புதியதாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சொத்துவரி செலுத்திய விவரங்கள் உடனடியாக பதிவு செய்யப்பட்டு, ரசீதுகள் வழங்கப்படுகிறது.
- பொது வசூல் மையங்கள் அமைக்க ஏதுவாக 83 மையங்களுக்கு கணிப்பொறிகள் வழங்கப்பட்டு, தற்போது 20 இடங்களில் வசூல் மையங்கள் செயல்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் பொது சேவை மையம் மற்றும் இ–சேவை மையம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து வரிகளும் செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- கட்டட உரிமையாளர்களிடமிருந்து சொத்துவரி தொடர்பாக பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு உடனடியாக கணிணி மூலம் ஒப்புகை சீட்டு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கோரிக்கையினை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை, குறுந்தகவல் மூலமும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர், அதன் விவரம் குறுந்தகவல் மூலம் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

- பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணம் ஏதுமில்லாமல் பெயர் மாற்றம் செய்து உத்தரவு பெற்று பொது மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

**தொழில் வரி மற்றும் நிறுவன வரி**

- தொழில்வரி மற்றும் நிறுவன வரி ஆகியவற்றை செலுத்தவேண்டியவர்கள், இணையதள வசதியினை பயன்படுத்தி, அவர்கள் செலுத்த வேண்டிய தொழில் வரி / நிறுவன வரி ஆகிய விவரங்களை பதிவு செய்து, அவர்களே தொழில்வரி / நிறுவன வரி ஆகியவற்றை சுய மதிப்பீடு (Self Assessment Scheme) செய்து, வரிகளை இணையதளம் மூலம் செலுத்த செலுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**தொழில் உரிமம்**

- தொழில் உரிமம் வழங்கும் நடைமுறையினை எளிதாக்கும் பொருட்டு, ஒற்றை சாளர முறையில் தொழில் உரிமம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- தொழில் உரிமம் பெற அளிக்க வேண்டிய விண்ணப்பத்தினை இணையதள வசதியினை பயன்படுத்தி சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தொழில் உரிமங்கள் இணையதள வாயிலாக புதுப்பித்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- வணிகர்களின் நலன் கருதி பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கி வரும் தொழில் உரிமங்களை புதுப்பிக்கும் காலத்தினை

ஓராண்டிலிருந்து ஐந்தாண்டுகளாக மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சமுதாய நலக் கூடங்கள்**

- 2011க்கு முன்பு ஒரு சமுதாய கூடத்தினை எந்த வரையறையும் இல்லாமல் ஒரு நபரே ஒரு வருடத்திற்கு பதிவு செய்து கொண்டு, அதற்குரிய கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதும். அவர் வேறு யாருக்கு வேண்டுமானலும் சென்னை மாநகராட்சிக்கு செலுத்திய தொகையினை விட 5 மடங்கு, 6 மடங்கு என 10 மடங்கு வரை சூழ்நிலைக்கேற்ப வியாபார நோக்குடன் பொது மக்கள் சுரண்டப்பட்ட நிலை இருந்தது. இன்று அந்த கொடுமையினை நீக்கி, சமுதாய கூடங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் சமுதாய நலக்கூடங்கள் முன்பதிவு செய்ய சில வரைமுறைகளை நிர்ணயம் செய்து அதன்படி முன்பதிவு செய்யும் போது திருமண தேதி / மணமகன் மணமகள் புகைப்படம், வீட்டு முகவரி, இருப்பிட முகவரிக்கான சான்று ஆகியவை பெற்றுக் கொண்டு முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் யாரும் எந்தவித தவறுகளும் செய்ய முடியாது. அதிகப்படியான தொகை வசூலிக்க முடியாது மற்றும் பயனாளிகளை தவிர வேறு யாரும் சமுதாய நலக் கூடத்தினை பயன்படுத்த முடியாது என்ற வகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- சமுதாய நலக்கூடங்கள் முன்பதிவு செய்ய சில வரைமுறைகளை நிர்ணயம் செய்து அதன்படி முன்பதிவு செய்யும் போது திருமண

தேதி / மணமகன் மணமகள் புகைப்படம், வீட்டு முகவரி, இருப்பிட முகவரிக்கான சான்று ஆகியவை பெற்றுக் கொண்டு முன்பதிவு செய்யப்படுகிறது.

- பொதுமக்கள் சமுதாய நலக் கூடத்தினை முன்பதிவு செய்ய உத்தேசித்துள்ள நாளில் ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை இணையதளம் மூலம் அறிந்துக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- சமுதாய நலக் கூடத்தினை முன்பதிவு செய்யும் பொது மக்களின் நிகழ்ச்சிகளுக்கு தேவையான மேஜை, நாற்காலிகள் மற்றும் சமையல் பத்திரங்கள் கட்டணம் ஏதுமின்றி இலவசமாக வழங்கப்படுகிறது.

**<u>பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள புதிய வழிகள் :–</u>**

**<u>விளம்பரங்கள்</u>**

- பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், பொது கழிப்பிடங்கள், தெரு மின் விளக்கு கம்பங்கள் மற்றும் பேருந்து நிழற்குடைகள் ஆகியவற்றில் தனியார் நிறுவனங்கள் மூலம் விளம்பரங்கள் மேற்கொண்டு அதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாயினை பெருக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

- சென்னை நகரில் தகுதிவாய்ந்த இடங்கள் கண்டறியப்பட்டு அங்கு விளம்பரங்கள் மேற்கொண்டு, அதில் வருவாய் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**<u>வாகன நிறுத்துமிடம்</u>**

- பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாகன நிறுத்துமிடங்கள் கண்டறியப்பட்டு அவற்றின் மூலம் வருவாய் பெருக்கிட வழிவகை செய்யப்பட்டு வருகிறது.
- பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மாதவரம் மண்டலத்தில் கனரக வாகனங்கள் (Truck Terminal) நிறுத்துமிடம் நிறுவப்பட்டு மாநகராட்சியின் வருவாயினை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**<u>சிறப்புத் திட்டங்கள் துறை</u>**

❖ **<u>உலகத்தரத்திலான கட்டமைப்புகளுடன் ஹாரிங்டன் சாலையை மேம்படுத்தும் பணி :</u>**

எதிர்காலத்தில் சென்னையில் ஒவ்வொரு சாலையும் எத்தகைய வசதிகளை கொண்டதாக இருக்கும் என்பதை நிர்ணயம் செய்து ஹாரிங்டன் சாலையை மேம்படுத்தும் பணி ரூ.9.92 கோடியில் மதிப்பீட்டில் மாதிரி சாலையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் மோட்டார் இல்லாத போக்குவரத்தினை (Non Motorized Transport) ஊக்குவிக்கும் விதமாக நடைபாதைகளை 5 அடியிலிருந்து 10 அடி அகலத்தில் 15 செ.மீ. உயரத்திற்கு சாலையின் நீளம் முழுவதும் ஒரே

சீராக இருக்கும்படியும், இருசக்கர வாகனங்கள் பயணிக்காத வண்ணம் கிரானைட் தடுப்பான்கள் அமைத்தும், மாற்றுதிறனாளிகள் எளிதாக ஏறும் வகையில் சாய்தளம் அமைத்தும் உலகத்தரம் வாய்ந்த நடைபாதையாக அமைக்கப்பட்டுள்ளது. சென்டர் மீடியன், எல்.ஈ.டி தெருவிளக்கு, பொதுமக்களால் எளிதில் கண்டறியும் வண்ணம் புதிய முறையில் வண்ணமிகு சிமென்ட் கான்கிரீட் பயன்படுத்தி வாகனம் நிறுத்துமிடம் மற்றும் மின்கம்பி வடங்களுக்கான பெட்டக வடிவில் டக்ட் அமைத்து புதிய வகையிலான கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டு இப்பணி **30.09.2015** அன்று முடிக்கப்பட்டது. இது ஒரு முன்மாதிரி சாலை. இதைப்போன்றே இனி வருங்காலத்தில் சென்னை மாநகராட்சியில் பல சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ **<u>காமராஜர் சாலையை மேம்படுத்தும் பணி :</u>**

காமராஜர் சாலை அகில இந்திய வானொலி நிலையம் முதல் சிவானந்தா சாலை வரை மேற்குபுறம் **150** ஆண்டுகளுக்கு மேலான கருங்கல்லில் மற்றும் வார்ப்பு இரும்பினால் ஆன புராதனமான மதிற்சுவர் காலப்போக்கில் சிதிலமடைந்துவிட்டது. எனவே, ரூ.**33.10** கோடி மதிப்பீட்டில், மேற்கு புறம் உள்ள நடைபாதை மற்றும் மதிற்சுவற்றை தொண்மை கெடாமல் நவீன தொழில்நுட்பத்துடன் உலகதரத்திற்கு இச்சாலையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி துருப்பிடிக்காத வார்ப்பு இரும்பினால் ஆன தடுப்புச்சுவர், பழைமையயான கிரானைட் சிறு தூண்களை மறு உபயோகப்படுத்தியும்

புதிய கிரானைட்டிலான கற்கள் கொண்டு நடைபாதை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சாலையின் கிழக்குப்புறம் உள்ள உலக பிரசித்திப்பெற்ற மெரினா கடற்கரையை கண்டுகளிக்க நம் நாட்டவர் மற்றும் வெளிநாட்டவர் வந்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, நம் நகரின் எழிலையும் நவீனத்தையும் உலகத்திற்கு பறைசாற்றும் விதமாகவும் காமராஜர் சாலை பார்ப்பதற்கு ரம்மியமாகவும் கம்பீரமான தோற்றத்தோடு காட்சியளிக்கும் வண்ணம் இப்பணி திட்டமிடப்பட்டு நடைப்பெற்று வருகிறது.

இதில் இம்மாநகரத்திற்கு முன்மாதிரியாக டாக்டர். அன்னி பெசன்ட் சாலை சந்திப்பில் பிரத்தியேக பேருந்து நிறுத்தத் தனிவழி அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் நீளம் 63 மீட்டரும் அகலம் 9 மீட்டரும் ஆகும். தொடர்ந்து நான்கு பேருந்துகள் எவ்வித போக்குவரத்து நெரிசல் ஏற்படாவண்ணம் இப்பேருந்து நிறுத்தத் தனிவழியில் நிறுத்த முடியும். இதன்மூலம் பேருந்துகள் வாகன பாதையில் நிறுத்துவதை தவிர்ப்பதோடு பயணிப்பவர்களின் பாதுகாப்பையும் மேம்படுத்த வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்து மேலாண்மை மேம்படுத்தப்படும். பிரதான சாலையின் நடைபாதை தொடர்ச்சியாக அமையும் வகையில் இந்த பேருந்து நிறுத்த தனிவழி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்து நிறுத்தத் தனிவழியில் 9 மீ x 2.5 மீ அளவில் நவீன பேருந்து நிழற்குடையும், வழிகாட்டும் பலகை மற்றும் எச்சரிக்கை பலகையும் அமைக்கப்பட உள்ளது. இதேபோன்ற பேருந்து நிறுத்தத் தனி வழி சென்னையின் மற்ற பிரதான சாலைகளிலும் அமைக்கப்படவுள்ளன.

**<u>மெரினா இணைப்பு சாலையை மேம்படுத்தும் பணி</u> :**

இப்பணி காமராஜர் சாலை சந்திப்பு முதல் பட்டினம்பாக்கம் வரை ரூ.47.00 கோடி. மதிப்பீட்டில் நவீனமான சாலையாக சென்னையில் முக்கிய இணைப்புச்சாலையாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இச்சாலையின் மூலமாக உலகபிரசித்திப்பெற்ற மெரினா கடற்கரை பட்டினம்பாக்கம் வரை நீட்டிக்கப்பட்டு கடற்கரை அழகினை ரசிப்பதற்கு உகந்த இடமாக மாற்றப்படவுள்ளது. இதுகாலம் வரை சுகாதரமற்ற நிலையிலிருந்த பாழ்பட்ட சாலையினை மேம்படுத்தி, சுகாதாரமான தூய்மையான இடமாக மாற்றி, மக்கள் பொழுதுபோக்கும் இடமாக அமையும் வகையிலும் அப்பகுதியில் வசிக்கும் மீனவ மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இச்சாலையின் நீளம் 2550 மீட்டர் மற்றும் அகலம் 18.20 மீட்டர் ஆகும். இதில் சிமெண்ட் கான்கிரீட் சாலை, கிரானைட் கற்கள் நடைபாதை, மிதிவண்டி பாதை, மழைநீர் வடிகால்வாய், சேவைத்துறைக்கான சிமெண்ட் கான்கிரீட் குழாய், நிலத்தடியில் கழிவுநீர் வடிகால் மற்றும் மின்விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தமிழ்நாடு கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்திடம் 17.12.2014 அன்று அனுமதி பெறப்பட்டு, 2015 பிப்ரவரி மாதம் துவங்கப்பட்டது. இரு வழக்குகள் தொடரப்பட்ட நிலையில் (64/2015 மற்றும் 28/2015) தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் 21.03.2015 அன்று முதல் இப்பணியை மேற்கொள்வதற்கு தடைவிதித்தது. இந்த இருவழக்குகளும் தேசிய பசுமை தீர்ப்பாயம்

புதுதில்லிக்கு மாற்றப்பட்டது. இப்பணியை மேற்கொள்ளலாம் என தீர்ப்பு வழங்கப்பட்டப்பின் **28.12.2015** முதல் பணி மீண்டும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தற்பொழுது மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெறுகிறது.

**மைலாப்பூர் கோவில் மற்றும் குளம் சுற்றிலும் உள்ள நடைபாதைகளை மேம்படுத்தும் பணி :**

உலக பிரசித்திபெற்ற கபாலீசுவர திருக்கோவில் திருத்தலத்தை சுற்றிலும் உள்ள கிழக்கு மாடவீதி, வடக்கு மாடவீதி மற்றும் தெற்கு மாடவீதி ஆகிய சாலைகளின் இருபக்கங்களிலும் கிரானைட் கற்கள் பதித்து பாதசாரிகளுக்கான நடைபாதை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்காக மக்கள் கருத்து கேட்புக்கூட்டம் நடத்தி, அப்பகுதியில் வாழும் மக்கள் மற்றும் அவ்விடத்தில் வணிகம் மற்றும் வியாபாரம் செய்வோரின் கருத்து கேட்பு பெறப்பட்டு அதன்படி இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் புராதானமான மயிலாப்பூரின் பண்டைய கலாச்சாரமும் மாறாமல் நவீன முறையில் வசதிகள் உள்ளவாறு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் வாகன நிறுத்தும் இடங்கள் மற்றும் நடமாடும் கடைகள் நிறுத்தும் இடங்கள் ஆகியவைகள் அமைக்கப்படும். மேலும் மின் கம்பி வடங்களுக்கான பெட்டகவடிவ டக்ட் (Duct), எல்.ஈ.டி. தெருவிளக்கு, பாதசாரிகளுக்கு இடையூறு இல்லா வகையிலான மின்கம்பப்பெட்டிகள் புதிய வடிவமைப்பு மூலம் அமைக்கும் பணிகள்

நடைபெற்று வருகின்றன. இந்த நடைபாதை மேம்படுத்தும் திட்ட பணிக்கான மதிப்பீடு ரூ.5.65 கோடி ஆகும்.

❖ **ஸ்மார்ட் சிட்டி:**

இந்தியாவில் ஸ்மார்ட் சிட்டியாக மாற்றப்படவுள்ள 100 நகரங்களில் முதற்கட்டமாக 20 நகரங்களின் பட்டியலை 28.01.2016 அன்று மத்திய நகர்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கோயம்பத்தூர் ஆகிய நகரங்கள் தேர்வாகியுள்ளன. சென்னை மாநகரை ஸ்மார்ட் சிட்டியாக உருவாக்குவதற்கு, சென்னை ஸ்மாட் சிட்டி திட்டத்தை தயார் செய்யும் பணிகளில் திருவாளர். ஜெ.எல்.எல். நிறுவனத்துடன் இணைந்து டவுன்லேண்ட் ஆலோசனை நிறுவனம் மற்றும் டாடா கன்சல்டன்சி நிறுவனங்கள் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை தயாரித்துள்ளன. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் ஒரு அங்கமாக ஒருபகுதியை மேம்படுத்துவதற்கு பொதுமக்களின் கருத்து பெறப்பட்டு அவர்களின் கருத்துப்படி தியாகராயநகர் தேர்வாகியுள்ளது, இங்கு மேம்பட்ட உள்கட்டமைப்பு மேற்கொள்வதற்கு திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் மற்றொரு அங்கமாக நகரம் முழுவதும் நிறைவேற்ற பொதுமக்களின் கருத்து பெறப்பட்டு அவர்களின் கருத்துப்படி மோட்டார் வாகனமில்லா போக்குவரத்து சார்ந்த திட்டங்கள் மற்றும் குடிநீர் மேலாண்மை மற்றும் வெள்ளக் கண்காணிப்பு மற்றும் எச்சரிக்கை அமைப்பு மேற்கொள்வதற்கு திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. சென்னையை ஸ்மார்ட் சிட்டியாக உருவாக்குவதற்கு மத்திய நகர்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் ஸ்மார்ட் சிட்டி மிஷன் அறிக்கை மற்றும் வழிகாட்டுதலின்படி சென்னை

மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டம் நிறைவேற்றப்படும். ஸ்மார்ட் சிட்டியில் அறிவிக்கப்ட்ட திட்டங்கள் நிறைவேற்ற அதற்கான சிறப்பு நோக்கு நிறுவனம் அமைக்க பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

❖ **<u>மாம்பலம் பகுதியில் ஆகாய நடைபாதை அமைக்கும் பணி :</u>**

மாம்பலம் இரயில் நிலையத்தையும் மற்றும் தியாகராய நகர் பேருந்து நிலையத்தையும் இணைக்கும் ஆகாய நடைபாதை (Sky Walk) அமைக்கும் பணிக்கு ஆய்வு மேற்கொண்டு, திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு கலந்தரிதற்குரியவர் சி.டி.எம்.ஸ்மித் அவர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கான மக்கள் கருத்தாய்வு நடைப்பெற்று அதன்படி இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இப்பணியின் மூலம் மக்கள் தியாகராய பேருந்து நிலையத்தையும் மாம்பலம் இரயில் நிலையத்தையும் அணுகுவதற்கு பிரத்யேகமான வழித்தடம் அமைக்கப்படவுள்ளது. ஆய்வு தொடர்ந்து நடைபெறுகிறது. ஆய்வு அறிக்கைகள் பெற்ற பிறகு பணிகள் மேற்கொள்ளப்படும்.

❖ **<u>பாரிமுனை பகுதியில் ஆகாய நடைபாதை அமைக்கும் பணி :</u>**

சென்னை கோட்டை இரயில் நிலையத்திலிருந்து பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் என்.சி.போஸ். சாலை வழியாக கடற்கரை இரயில் நிலையத்தையும் இணைக்கும் ஆகாய நடைபாதை (Sky Walk) அமைக்கும் பணிக்கு ஆய்வு மேற்கொண்டு, திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு கலந்தரிதற்குரியவர் சி.டி.எம்.ஸ்மித் அவர்கள் நியமிக்கப்பட்டனர். இதற்கான மக்கள் கருத்தாய்வு நடைப்பெற்று அதன்படி இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இப்பணியின் மூலம்

மக்கள் பிராட்வே பேருந்து நிலையத்தையும், கோட்டை மற்றும் கடற்கரை இரயில் நிலையத்தையும் என்.சி.போஸ். சாலை சுற்றியுள்ள வணிகம் மற்றும் அலுவலக பணிகளுக்காக பயன்படுத்தும் வகையில் பிரத்யேகமான வழித்தடம் அமைக்கப்படவுள்ளது. இந்த ஆகாய நடைப்பாதை அவ்விடத்தின் பாரம்பரிய கட்டிட கலையை ஒட்டி வடிவமைக்கப்படவுள்ளது. ஆய்வு தொடர்ந்து நடைபெறுகிறது. ஆய்வு அறிக்கைகள் பெற்ற பிறகு பணிகள் மேற்கொள்ளப்படும்.

❖ **<u>மிதிவண்டி பகிர்மானம் திட்டம் :</u>**

மிதிவண்டி பகிர்மானம் என்பது நகர்ப்புற போக்குவரத்திற்கான திட்டமாகும். மிதிவண்டி பகிர்மானம் திட்டம் என்பது வாடகைக்கு மிதிவண்டியை ஒரு நிலையத்திலிருந்து எடுத்து சவாரி செய்துவிட்டு மீண்டும் அருகில் உள்ள நிலையத்தில் அதனை விட்டு செல்வதாகும். இத்திட்டமானது சென்னை வாசிகள், சுற்றுலா பயணிகள், பார்வையாளர்களுக்கு மோட்டார் அல்லாத மாற்று போக்குவரத்தாகும். இந்த திட்டத்தின் மூலம் தூய்மையான நகர்ப்புற சுற்றுப்புற சூழலை ஊக்குவிக்க முடியும்.இந்த திட்டத்தில் 3000 மிதிவண்டிகள் மற்றும் 200 மிதி வண்டி பூட்டும் நிலையங்கள் சேவைத்துறை நிறுவனங்கள் மூலம் கொண்டு வரப்படவுள்ளது. இந்த 200 மிதி வண்டி பூட்டும் நிலையங்கள் மக்கள் அதிகமாக உபயோகப்படுத்தும் இடங்களான பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், பிரபலமான நிறுவனங்கள் உள்ள இடங்கள் போன்றவற்றில் அமைக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பம் கோரப்பட்டு ஒப்பந்தகாரர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் அரசின் கருத்து பெறப்பட்டுள்ளது. அரசின் அறிவுறுத்தலின்படி இப்பணி பொது

தனியார் பங்களிப்பு (PPP mode) என்ற முறையில் மேற்கொள்ள தற்போது சாத்தியக்கூறு குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக கலந்தறிதற்குரியவர் மூலம் ஆய்வு பணி நடைபெறுகிறது.

- **<u>வாகன நிறுத்தம் மேலாண்மைத் திட்டம் :</u>**

  சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் தடுக்கும் வகையில் வாகனம் நிறுத்தும் இடங்களை நெறிப்படுத்துவதற்கு ஒரு வாகன நிறுத்தம் மேலாண்மைத் திட்டம் (Parking Management System) செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. புதிய முறையில் வாகன நிறுத்தும் இடத்தின் பரப்பளவை கொண்டு ஒப்பம் கோர திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணி பொது தனியார்பங்களிப்புடன் (PPP mode) என்ற முறையிலும் மேற்கொள்ள சாத்தியக்கூறு குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக கலந்தறிதற்குரியவர் மூலம் ஆய்வு பணி நடைபெறுகிறது. இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள வாகன நிறுத்த கட்டணத்திற்கு மிகாமல் மக்கள் எளிதில் பயன்பெறும் வகையிலும், போக்குவரத்து மேலாண்மை மேம்படும் வகையிலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருமான இழப்பு இல்லாமலும் இருக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**<u>கட்டடத்துறை</u>**

<u>பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டடத்துறையில் மேற்கொள்ளப் பட்டுள்ள பணிகள்</u>

ரூ.3 கோடியே 27 இலட்சங்கள் மதிப்பீட்டில் அல்லி குளத்தில் வணிகவளாகம், ரூ.20 கோடியே 35 இலட்சங்கள் இலட்சங்கள் மதிப்பீட்டில் 10 சமூகநலக்கூடங்கள், ரூ.11 கோடியே 76 இலட்சங்கள் மதிப்பீட்டில் 6 சலவைக்கூடங்கள், ரூ. 7கோடியே 39 இலட்சங்கள் மதிப்பீட்டில் 2 மீன் அங்காடிகள், ரூ. 6 கோடியே 49 இலட்சங்கள் மதிப்பீட்டில் 9 எரிவாயு எரியூட்டகங்கள், ரூ.52 கோடியே 15 இலட்சங்கள் மதிப்பீட்டில் 23 மருத்துவமனை கட்டடங்கள், ரூ.23 கோடியே 49 இலட்சங்கள் மதிப்பீட்டில் 5 வாகன இயக்கூர்தி நிலையங்கள், ரூ.8 கோடியே 95 இலட்சங்கள் மதிப்பீட்டில் 1 அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம், ரூ.8 கோடியே 97 இலட்சங்கள் மதிப்பீட்டில் 18 பகுதி அலுவலகம் மற்றும் வார்டு அலுவலகங்கள், ரூ.13 கோடியே 54 இலட்சங்கள் மதிப்பீட்டில் ரிப்பன் மாளிகை புனரமைக்கும் பணி, ரூ.19 கோடியே 74 இலட்சங்கள் மதிப்பீட்டில் 14 பள்ளிக்கட்டிடங்கள், ரூ.1 கோடியே 28 இலட்சங்கள் மதிப்பீட்டில் 1 வணிக வளாகம், ரூ.2 கோடியே 48 இலட்சங்கள் மதிப்பீட்டில் விக்டோரியா பப்ளிக் ஹால் புனரமைக்கும் பணி, ரூ34 கோடியே 15 இலட்சங்கள் மதிப்பீட்டில் 4 மண்டல அலுவலகங்கள், ரூ.5 கோடியே 16 இலட்சங்கள் மதிப்பீட்டில் 12 இரவு காப்பகங்கள்

மேலும், சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு செனாய் நகரில் அடுக்குமாடி வாடகை குடியிருப்புகள் மற்றும் அலுவலக வளாகம் கட்டுதல்

பல்வேறு இடங்களில் அம்மா வாரச்சந்தை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகள் துவக்கப்பட்டுள்ளன, பல்வேறு இடங்களில் பல அடுக்கு வாகன நிறுத்தம் மற்றும் அம்மா திரையங்கம் பணி, மண்டலம்–9, வார்டு–113 நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் பல அடுக்கு வாகன நிறுத்தத்துடன் கூடிய மண்டல அலுவலகம்–9 கட்டும் பணி, மண்டலம்–14, வார்டு– 188 பள்ளிக்கரணையில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் சுமார் 100 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகராட்சி நூற்றாண்டு நினைவு அம்மா பல்நோக்கு அரங்கம் அமைக்கும் பணி, மண்டலம்–13, சைதாப்பேட்டை அண்ணாசாலையில் ரிச்சர்ட்ஸ் பூங்காவில் 95.00 கோடி மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் 16 தளங்கள் கொண்ட அம்மா வணிக வளாக கட்டடம் பணி, சென்னை மாநகர் முழுவதும் 348 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு நவீன கழிவறைகளை அமைக்கும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை யாவும் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட திட்டங்களாகும்.

## மன்றக்கூட்டங்கள் விவரம்

## நவம்பர் 2011 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 2016 ஆம் ஆண்டு வரையில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டங்கள் குறித்த விவரங்கள்

1. நடைபெற்ற மன்றக் கூட்டங்களின் மொத்த எண்ணிக்கை – 53

2. மன்றக் கூட்டங்கள் நடைபெற்ற மொத்த நேரம் – 146 மணி நேரம் மற்றும் 49 நிமிடங்கள்

3. மன்றக் கூட்டங்களில் மேயர் அவர்கள் பேசிய மொத்த நேரம் – 59 மணி நேரம் மற்றும் 36 நிமிடங்கள்

4. மன்ற உறுப்பினர்களால் மன்றக் கூட்டங்களில் கேட்கப்பட்ட மொத்தக் கேள்விகளின் எண்ணிக்கை (ஜனவரி 2016 வரை) – 477

5. நிறைவேற்றப்பட்ட மொத்த தீர்மானங்களின் எண்ணிக்கை –3139

6. மன்றக் கூட்டங்களில் இதுவரையில் கேள்விகள் கேட்ட மொத்த மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை : 97

7. அதிகமான கேள்விகள் கேட்ட மன்ற உறுப்பினர்கள் :

| மன்ற உறுப்பினர் பெயர் | கேள்விகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. திரு.பி.சீனிவாசன் | 24 |
| 2. திரு.பி.வி.தமிழ்செல்வன் | 22 |
| 3. திருமதி.எ.எழிலரசி | 22 |
| 4. திரு. ஜி.ஆர்.சீனிவாசன் | 22 |
| 5. திரு.பி. ஆறுமுகம் | 15 |
| 6. திருமதி. எம். சரோஜா | 15 |

**<u>ஒப்பீடு</u>**

மு.க. ஸ்டாலினும், மா. சுப்பிரமணியனும் மேயர்களாக திமுக ஆட்சியில் பத்தாண்டு காலத்தில் இருவரும் கலந்து கொண்ட மொத்த ஆய்வுக்கூட்டங்கள் / கள ஆய்வுகள்/ நிகழ்ச்சிகளின் மொத்த எண்ணிக்கை – 1237 மட்டுமே ஆகும்.

ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொண்டன், கடந்த அக்டோபர் 2011 முதல் இன்று வரை கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டங்கள் / கள ஆய்வுகள் / நிகழ்ச்சிகளின் மொத்த எண்ணிக்கை – 9656 ஆகும்.

மு.க.ஸ்டாலின் மற்றும் மா. சுப்பிரமணியன் ஆகியோர் தாங்கள் மேயர் பதவி வகித்த பத்தாண்டுகளில் மாநகராட்சிப் பணிகளுக்காக செலவு செய்த மொத்த தொகை ரூ.15,307.64 கோடி தான்.

ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையால், மாண்புமிகு அம்மா அவர்களால் கடந்த 2011 அக்டோபர் முதல் இன்று வரை சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்கென செலவு செய்த தொகை மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகளின் தொகை மொத்தம் 23 ஆயிரத்து 73 கோடியே 93 இலட்சம் ரூபாய் ஆகும்.

அவர்கள் இருவரும் சேர்ந்து 10 ஆண்டுகளில் செய்த மொத்த பணிகளின் எண்ணிக்கை – 17,904.

ஆனால், 2011 முதல் இன்று வரை நாம் செய்து முடித்ததும் நடைபெற்று கொண்டிருப்பதுமான பணிகளின் எண்ணிக்கையோ 47,136ஆகும்.

- பொதுமக்களிடமிருந்து மேயரின் தனிப்பட்ட கைபேசி மூலமாக பெறப்படும் மனுக்கள், நேரிலும் மற்றும் தபால் மூலமாகவும் மற்றும் மின்னஞ்சல் மூலமும், 24 மணி நேரமும் இயங்கும் 1913 புகார் பிரிவு தொலைபேசி மூலமாகவும் பெறப்படும் மனுக்கள் பத்திரிக்கைகளின் துணுக்குச் செய்தி புகார்கள் என அனைத்து வகையிலும் 4 இலட்சத்து 21 ஆயிரத்து 195 புகார் மனுக்கள் மற்று கோரிக்கைகள் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 2 இலட்சத்து 99ஆயிரத்து 1 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 12789 மனுக்கள் மீது உரிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- அதே நேரத்தில் முன்னாள் மேயர் மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சியில் மேயராக 25.10.2006 முதல் 24.10.2011 வரையில் பதவி வகித்த 5 ஆண்டு காலத்தில், அவர் பெற்ற மொத்த மனுக்களின்

எண்ணிக்கையே **5665** தான். இதிலும், **4459** மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மீதம் **1211** மனுக்கள் நிலுவையிலும், கைவிடப்பட்டும் உள்ளன என்பதை மதிப்புமிகு உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர் செவ்வாய் கிழமைகளில் மட்டுமே பொது மக்களிடமிருந்து மனுக்களை பெற்று வந்திருக்கிறார். அவ்வளவுதான் மாநகராட்சியின் பதிவுகளில் உள்ளது. ஸ்டாலின் ஏதேனும் மனுக்கள் பெற்றாரா என்பது குறித்த பதிவுகள் இல்லை. இவர்கள் எந்த அளவில் மக்கள் பணி செய்தார்கள் என்பதை இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

## <u>நிறைவுரை</u>

மதிப்புமிக்க மாமன்ற உறுப்பினர்களே,

''மக்களால் நான் மக்களுக்காகவே நான்'' என்று தன் வாழ்க்கையை தமிழக மக்களுக்காகவே அர்ப்பணித்து வாழ்ந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 52 மாதங்களில் அனைத்து மக்களையும் தாயன்போடு அரவணைத்து, குழந்தைகளின் பசியறிந்து உணவூட்டும் தாய் போல, சென்னை மாநகர மக்களின் தேவையறிந்து, தமிழக மக்கள் வேண்டுவது என்னவென்று ஆய்ந்து அறிந்து, அவர்களைத் தேடித் தேடி உதவிகள் செய்து மக்களின் அன்பையும் பாசத்தையும் அளவின்றிப் பெற்று இந்த உலகிலேயே வேறு யாரும் இணையில்லை என்று சொல்லும்படி, நிகரில்லாத் தலைவராக! மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு அம்மா அவர்களின் 5 ஆண்டுகால பொற்கால ஆட்சியில்,**

- ❖ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 2 ஆயிரத்து 913 கோடியே 62 இலட்சம் செலவில் 47 இலட்சத்து 14 ஆயிரத்து 522 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

- ❖ வேளாண்துறை சார்பாக கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூபாய் 158 கோடியே 31 இலட்சம் செலவில் 3 இலட்சத்து 28 ஆயிரத்து 140 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ அதைப்போன்று கால்நடைத்துறை சார்பாக ரூபாய் ஆயிரத்து 55 கோடியே 92 இலட்சம் செலவில் 5 இலட்சத்து 15 ஆயிரத்து 266 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ பால்வளத்துறை சார்பில் ரூபாய் 35 கோடியே 32 இலட்சம் செலவில் 3 இலட்சத்து 21 ஆயிரத்து 521 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ மீன்வளத்துறை சார்பில் ரூபாய் 25 கோடியே 88 இலட்சம் செலவில் 9 ஆயிரத்து 975 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூபாய் ஆயிரத்து 953 கோடியே 67 இலட்சம் செலவில் 53 இலட்சத்து 4 ஆயிரத்து 63 நபர்கள் பயடைந்துள்ளார்கள்.
- ❖ கைத்தறிதுறை சார்பில் ரூபாய் 409 கோடியே 53 இலட்சம் செலவில் 47 இலட்சத்து ஆயிரத்து 22 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூபாய் 7 ஆயிரத்து 187 கோடியே 54 இலட்சம் செலவில் 7 கோடியே 30 இலட்சத்து 29 ஆயிரத்து 141 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ தொழிலாளர் நலத்துறை சார்பில் ரூபாய் 67 கோடியே 78 இலட்சம் செலவில் 5 இலட்சத்து 26 ஆயிரத்து 354 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

- ❖ சட்டத்துறை சார்பில் ரூபாய் 33 இலட்சம் செலவில் 43 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூபாய் 566 கோடியே 40 இலட்சம் செலவில் 8 இலட்சத்து 69 ஆயிரத்து 860 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ வருவாய் துறை சார்பில் ரூபாய் 3 ஆயிரத்து 508 கோடியே 32 இலட்சம் செலவில் 13 கோடியே 62 இலட்சத்து 68 ஆயிரத்து 888 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ பள்ளிக் கல்வித்துறை சார்பில் ரூபாய் 11 ஆயிரத்து 493 கோடியே 47 இலட்சம் செலவில் 24 கோடியே 19 இலட்சத்து 42 ஆயிரத்து 939 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ சமூக நலத்துறை சார்பில் ரூபாய் 21 ஆயிரத்து 225 கோடியே 78 இலட்சம் செலவில் 31 கோடியே 32 இலட்சத்து 808 நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.
- ❖ சிறப்புத் திட்டங்கள் துறை சார்பில் ரூபாய் 15 ஆயிரத்து 335 கோடியே 44 இலட்சம் செலவில் 1 கோடியே 88 இலட்சத்து 4 ஆயிரம் நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**ஆக கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், ரூபாய் 65 ஆயிரத்து 976 கோடியே 77 இலட்சம் செலவில், 51 கோடியே 86 இலட்சத்து 56 ஆயிரத்து 542**

**வகை வகையான பயன்களை மக்களுக்கு கொடை மழையாக வழங்கி இருக்கிறார்கள்.**

அதனால் தான், வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் வெற்றி பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களே மீண்டும் முதலமைச்சராகத் தொடர வேண்டும் என தமிழக மக்கள் விரும்புகிறார்கள்.

மக்களின் இந்த விருப்பத்தை நிறைவேற்ற,

ஓய்வின்றிப் பாடுபடுவோம்!

உறக்கமின்றிப் பாடுபடுவோம்!

சோம்பலே ஓடிப்போ! என்று விரட்டியடித்து,

சுழன்று சுழன்று பணியாற்றுவோம்!

சுறுசுறுப்பின் இயக்கமாகப் பாடுபடுவோம்!

பெருநகர சென்னை மாநகரின் 24 தொகுதிகளில் மட்டுமல்ல தமிழகம் முழுவதும் உள்ள 234 தொகுதிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றிக் கொடியை பட்டொளி வீசிப் பறக்க வைப்போம்.

அத்தனை தொகுதிகளிலும் வெற்றிக் கனி பறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் தங்கக் கரங்களில் ஒப்படைப்போம்! இது சத்தியம் என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!